மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 6—இதழ் 3 ★ 19-5-57 சென்னை ★ விலை 16 காசு

கனம் மந்திரி பதிலில் 'கனம்' இல்லை!

சென்னை சட்டசபையில் முதல் தடவையாகத் திராவிட முன்னேற்றக்கழக அங்கத்தினர்கள் பேசினார்கள். கவர்னருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது எழுந்த விவாதத்தில், தங்களுக்குக் கிடைத்த குறைந்த நேரத்தில் ஓரளவுக்கு சீர்பட, நிரல்பட, அழகுடன் நமது தோழர்கள் சில கருத்துக்களை விளக்கினார்கள். பல ஆண்டுகளாக நாட்டில் பலப்பல கூட்டங்கள், பத்திரிக்கை ஏடுகள் மூலமாக நாமெடுத்து விளக்கி வந்த அடிப்படைக் கருத்துக்களில் சில அங்கு குறுகிய நேரத்தில் எடுத்து வைக்கப்பட்டன. சட்டசபைக்கு அது புதிது, ஆனால் சட்டசபை அங்கத்தினர்கள் பலர் அதற்கு முன் கேட்டிருப்பார்கள், நேரிடையாக அல்லாவிட்டாலும் ஒதுங்கி நின்று! பத்திரிக்கைகளில் படித்து இருக்கக் கூடும்! கேட்காமலும் படிக்காமலும் இருந்தாலுங்கூட, கேட்டவர்களோ படித்தவர்களோ சொல்லவாவது அறிஞர் அண்ணா அவர்களையும் அவர் சார்ந்த இயக்கம் பற்றியும் கேள்விப்பட்டிருப்பார்கள்! கேட்டதையும், படித்ததையும் விட அதிகமாக அவர்கள் எண்ணியெண்ணி, நாம் அவர்களை மறந்தாலும் அவர்கள் நம்மை மறவா வகையில் இருந்திருப்பார்கள்! ஆனாலும் முதல் தடவையாக, நேரில் எதிரெதிர் அமர்ந்து, ஒருவர் பேச மற்றவர்கள் கேட்கும்படியான நிலை-பலருக்கு நிர்ப்பந்தமான நிலை சட்ட சபையில் ஏற்பட்டது.

6ந் தேதியன்று அறிஞர் அண்ணா அவர்கள் பேசினார்கள், பகல் 1-மணிக்கு ஆரம்பித்து 1-28க்கு முடித்தார். 28 நிமிடங்களில், சொல்லவேண்டியவற்றில் பேச நினைத்ததில் ஒரு பகுதியை அவர் சுருக்கமாகக் கூறி முடித்தார். மறுநாள் காலை கனம் சுப்பிரமணியம் பதில் தரும் முறையில் பேசினார்.

அண்ணா அவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிறார். அவரையும் சேர்த்து 15 பேர்கள்தாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இருக்கின்றனர்! கனம் சுப்பிரமணியம் அவர்களோ நாடாளும் மந்திரி, சட்டசபையின் "லீடர்" அவருக்குப் பின்னால் 150 பேர்கள் இருக்கின்றனர்! கனம் மந்திரியின் பேச்சிற்கு, அவரது கட்சி அங்கத்தினர்களின் எண்ணிக்கை கனம் ஆதரவாக இருந்தது!

தமது பேச்சில் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஏற்றுள்ள தூய பணி, எதிர்க்கட்சியும் ஆளுங்கட்சியாகும் வாய்ப்பு, அரசியலில் ஏற்பட்டுள்ள ஜமீன்தாரி முறை, வடக்கு-தெற்கு ஏற்றத் தாழ்வுகள், மத்திய-மாநில அரசாங்கங்களின் சீர்கெட்ட உறவு நிலை, எதிர்க்கட்சியினரின் பேச்சுரிமை, நிலச் சீர்திருத்தத்தில் ஆளுங்கட்சியினரின் தாமதம், இவைகளை இடையிடையே மேற்கோள்களுடன், ஆதாரங்களுடன், புள்ளிவிவரங்களுடன் விளக்கினார்.

மறுநாள் கனம் சுப்பிரமணியம் அவர்கள் பேசும்பொழுது அண்ணா அவர்கள் தந்த புள்ளி விவரங்களை மறுத்தாரா? இல்லை. வட நாட்டில் உள்ள தொழில் வசதிகள், வேலை நாட்கள், வாழ்க்கை வருமானங்கள், அவற்றை தென்னாட்டில் உள்ளவைகளுடன் ஒப்பிட்டு அண்ணா அவர்கள் காட்டிய புள்ளிவிவரங்களை கனம் சுப்பிரமணியம் "இவைகளெல்லாம் கிடையாது?" என்று கூறினாரா? இல்லை.

"நிலப்பிரபுக்களுக்குச் சாதகமாக உள்ள இன்றைய அரசாங்கம் விரைவாகச் சீர்திருத்தங்களைக் கொண்டுவராது" என விநோபா அவர்கள் சொல்லியதை அண்ணா அவர்கள் மேற்கோள் காட்டினார். கனம் சுப்பிரமணியம் அதற்குப் பதில் தந்தாரா?

சமுதாய நலத்திட்டத்தைப் பற்றி, அதன் தலைவராக உள்ளவர் தந்த கருத்துக்களை அண்ணா சுட்டிக் காட்டினார். அதற்குக் கனம் சுப்பிரமணியம் மறுப்புத் தந்தாரா?

"ஏகாதிபத்திய தாசர்கள், ஆங்கிலேய அடிவருடிகள் என்று சொல்லப்பட்ட பொழுது, ஆளுங்கட்சியின் பக்கத்தில் இருக்கும் பலருடைய முகங்கள்தாம் சுளித்தன!" என அண்ணா அவர்கள் கூறியதை மறுத்து, "இல்லை, உங்கள் பக்கத்தில்தான்

(11-ம் பக்கம் பாரக்க)

நாவடக்கம்

பொதுவாழ்வில் ஈடுபட்டவர்களுக்கு அடக்கம் தேவை. அதிலும் எல்லாவற்றிலும் மேலாக நாவடக்கம் மிக முக்கியமானது. அன்புமார்க்கத்தைப் பரப்பிய புத்தர், வாழ்வில் அமைதியும் அன்பும் ஒன்ருகப் பொருந்த போதித்தார். அவ்வாறு அமைதியான வாழ்வுக்கு அடக்கம்-நாவடக்கம் எவ்வளவு தேவையானது என்பதற்கு கீழ்க்கண்ட கதையைப் புத்தர் சொன்னார்.

"ஒரு அரசனிடம் வலிமை மிக்க யானை ஒன்றிருந்தது, அது சாதாரன யானையல்ல, நூற்றுக் கணக்கான யானைகள் எதிர்த்து வந்தாலும் தனிமையில் நின்று அது போராடி வெற்றிபெறும். போருக்குச் செல்லும்பொழுது அதன் உடல் முழுவதும் படைக்கலங்களால் மூடப்பட்டிருக்கும், கொம்பில் வாட்கள் கட்டப்பட்டிருக்கும், காலைச் சுற்றி வேல்கள் பின்னப்பட்டிருக்கும், முதுகுப் புறம் பெரிய அரிவாள்கள் அசையும், வாலில் பெரிய இரும்புக் குண்டு ஆடும். யானை எந்தப்பக்கம் திரும்பினாலும் சரி, கொம்பை அசைத்தாலும், காலை தூக்கினாலும், வாலை அடித்தாலும் பக்கத்தில் எவரும் நெருங்க முடியாது. பலமான கோட்டைபோல காட்சியளித்த அந்த யானையைப் பார்த்து எல்லோரும் பெருமைப்பட்டார்கள். ஆனால் அந்த யானையிடம் இருந்த பலவீனம் யானைப் பாகனுக்குத் தெரியும். அதுதான் அதனுடைய துதிக்கை! துதிக்கையில் அம்பு பட்டால், யானை கீழே விழுந்து விடும். இந்த உண்மை தெரிந்த யானைப் பாகன், சண்டையின் பொழுது, துதிக்கையைமடக்கிவைத்துக்கொள்ளும்படி பழக்கியிருந்தான்.

ஒரு சண்டையின் பொழுது யானை நன்ருகச் சண்டையிட்டுக் கொண்டிருந்தது. திடிரென்று மடங்கியிருந்த துதிக்கையை நீட்டி சத்தமிட்டு, சண்டைபோட முயன்றது. இனிமேல் இந்த யானைச் சண்டைக்குப் பயன்படாது என்று யானைப்பாகன் யானையை திருப்பிக்கொண்டு போய் விட்டான்.

மனிதர்கள் நாவை அடக்கப் பழகிக்கொண்டால், எல்லாம் நன்ருக முடியும். ஆனல் இந்தக் கதையில் வருகிற யானை துதிக்கையை நீட்டிய பொழுது அதற்கு ஆபத்து வருவதுபோல, நாவை நீட்டும் பொழுது மனிதர்களுக்குக் கேடுவிளைகிறது. நல்ல யானை போர்க்களத்தில் எப்படி துதிக்கையை மடக்கிக் கொண்டிருக்க வேண்டுமோ, அப்படியே மனிதர்களும் வாழ்க்கையில் நாவை அடக்கிக்கொண்டிருக்கப் பழகவேண்டும்."

"அரியலூர்கள்" நிகழ்வதேன்?

அரசாங்கத்தின் திறமையின்மையே காரணம்!

"மகபூப் இரயில்வே விபத்துக்கு மத்திய இரயில்வே நிர்வாகமும் அதன் உயர்தர அதிகாரிகளின் திறமையற்ற போக்கும்தான் முக்கிய காரணங்களாகும்" இவ்வாறு மகபூப் இரயில் விபத்தின் காரணங்களை ஆராய நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.

1956 செப்டம்பர் 1ந்தேதியன்று இரவு, ஐதராபாத் பகுதியில் மகபூப் நகர் என்ற ஊருக்கருகில் கோர ரயில் விபத்து ஒன்று நிகழ்ந்தது. அதில், அரசாங்கக் கணக்குப்படி, 121-பேர்கள் இறந்தனர். கைகால் இழந்து படுகாயப்பட்டோர் தொகை அதிகம் அந்த இரயில் விபத்துக்குப்பின், விபத்துக்கான காரணங்களை ஆராய, ஒரு விசாரணைக் குழுவை இந்திய அரசாங்கம் நியமித்தது. அந்த விசாரணைக் குழுவில் பம்பாய் உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக இருக்கும் சுந்தர்லால் திரிக்கம்லால் தேசாய்என்பவர் நியமிக்கப்பட்டார். 1956 டிசம்பர் மாதத்தில் துவங்கிய அந்தக்குழு, 1957 மே மாதத்தில் தனது பரிசிலனையை முடித்து, விபத்துக்கான காரணங்களையும், பொறுப்புகளையும் வெளியிட்டுள்ளது.

விசாரணை நடத்தியவர் பம்பாய் உயர்நீதி மன்ற நீதிபதி! விசாரணை நடத்துவதில் அவரது திறமைபற்றியோ, இந்த விசாரணையில் மாறுபட்ட தீர்ப்பை வேண்டுமென்று வழங்குவார் என்றோ கூறுவது முடியாது.

நேரடியான விசாரணைக்குப்பின் நீதிபதி தேசாய்அவர்கள், "ரயில்வே நிர்வாகமும் உயர்தர அதிகாரிகளும்தான் விபத்துக்குப் பொறுப்பாளிகள்" என முடிவு கூறியுள்ளார். அவர் அவ்வாறு சொல்வதற்கு முக்கியமாகக் கீழ்க்கண்ட காரணங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

(1) மழைபெய்து வெள்ளம் வந்தால், பெருகும் தண்ணீரை வெளியேற்றுமளவுக்கு பாலத்தின் கீழ் திறந்த வாய்கள் அமைக்கப்படவில்லை.

(2) விபத்து நடந்த இரயில்வே பாலத்திற்கும் ஆறுபர்லாங் தூரத்திலிருந்த மற்றொரு பாலத்திற்கும் சேர்த்து ஒரே காவல்காரன்தான் நியமிக்கப்பட்டிருந்தது தவறு.

(3) சான்கான் என்ற இடத்தில் 1954-ல் நடந்த இரயில்வே விபத்துக்குப்பின், இரயில்வே பாலங்களை பொதுவாகச் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்ற உத்தரவு வந்தும், மகபூப்நகர் பாலம் சீர்திருத்தி அமைக்கப்படவில்லை.

நீதிபதி தேசாய் தந்துள்ள காரணங்களை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

மத்திய அரசாங்கம் பார்த்துதான் ஒரு நீதிபதியை நியமித்து விபத்துக்கான காரணங்களை விசாரணை செய்யச் சொல்லியது! ஆனால் அந்த நீதிபதி தந்த முடிவை அரசாங்கம் ஏற்க மறுக்கிறது! காரணம் அரசாங்கத்தின் மீது குற்றம் ஏற்படுகிறது, அரசாங்க இலாகா ஒன்றின் பொறுப்பற்ற தன்மையை அது சுட்டிக் காட்டுகிறது!

அரசாங்கத்தின் நிர்வாகக் குறைவால்தான் மகபூப் நகர் பாலத்தருகே 121 பேர் துடிதுடித்து மாண்டனர்! அரசாங்கக் கணக்குப்படி 121, உண்மையில் மண்ணில் மறைந்து, வெளிக்கு மறைக்கப்பட்டு போனவர்கள் எவ்வளவோ!

அதே விதமான நிர்வாகக் குறைவால்தான் அரியலூர் விபத்து ஏற்பட்டது! அதில் அரசாங்கக் கணக்குப்படி மாண்டவர்கள் 144! அங்கு நேரில் சென்று கண்டவர்கள் கணக்குப்படி 300க்கு மேல்!

அரசாங்க இலாக்காவின் நிர்வாகக் குறைவால்தான், நாட்டில் மகபூப் நகர் விபத்துகள் உண்டாகின்றன, அரியலூருக்கருகிலுள்ள மருதையாற்றில் பிணங்கள் மிதந்து சென்றன!

காங்கிரசு ஆட்சியில் தடம்புரளும் வண்டிகள், தவறி விழும் என்ஜின்கள், இடிந்து போகும் பாலங்கள், அவற்றில் சிக்கி மாண்டுபோகும் மக்கள் தொகை ஏராளம்!

சான்கான், மகபூப்நகர், அரியலூர் போன்ற பெரும் விபத்துகள் அடுத்தடுத்து வருவானேன்?

அரசாங்கம் காண மறுக்கிறது, விபத்துகள் ஏற்பட்டதற்கான காரணங்களை, அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு எடுத்து விளக்கினாலும்-அரசாங்கம் அதை ஏற்க மறுக்கிறது!

தனக்காகவும் தெரியாது, சொன்னாலும் ஏற்றுக்கொள்வதில்லை! அத்தகைய மமதை மிகுந்த "மன்னர்கள்" ஆட்சிதான் இன்று நடைபெறுகிறது! அந்த ஆட்சியின் விமரிசனங்கள்தான் மகபூப்நகர், அரியலூர்போன்ற விபத்துகள்!

இரயில்வே மந்திரி வரவு-செலவு திட்டத்தை அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இரயில்வே மந்திரி இலாகாவின் திறமையைக் காணவேண்டுமென்றால், பணத்தின் எண்ணிக்கையை மட்டும் பார்த்தால் போதாது. ஏற்பட்டுள்ள விபத்துகளின் எண்ணிக்கையையும் சற்று பார்க்கவேண்டும்! இரயில்வே செலவழித்த தொகையுடன், விபத்துகளின் மூலம் "செலவழித்த" உயிர்களையும் கணக்கிட வேண்டும்! ○

காங்கிரஸ் சமதர்ம ஆட்சியில் "வெள்ளையானை"

பஞ்சாப் கவர்னருக்கு 25 லட்ச ரூபாயில் மாளிகை!

காங்கிரஸ் ஆட்சியில் அதிகாரவர்க்கத்தின் ஆடம்பரச் செலவுகளுக்கு மக்களின் வரிப்பணம் ஏராளமாகச் செலவிடப்படுகிறது. ஏழைகள் வறுமைத் தீயில் புழுவாகத் துடிக்கும் பொழுது, ஆட்சிபீடத்துக்குச் செல்பவர்கள் கோலாகலமாக வாழ்வது பலருக்கு மனத்துயரை உண்டாக்கியுள்ளது. உண்மையான காங்கிரசுக்காரர்கள் அதை உணர்கிறார்கள். ஆனால் கட்சியின் கட்டுப்பாடு அவர்களைப் பேசவிடாது வாயடைத்து விடுகிறது. ஆனால் ஒவ்வோர் சமயம் காங்கிரசுக்காரர்களில் ஒருசிலரே, பொறுக்க முடியாமல், காங்கிரசு ஆட்சியில் விளைந்துள்ள கொடுமைகளை வெளியிடுகின்றனர்.

பஞ்சாப் மாநிலத்தில் சான்டிநகர் என்று புதிதாக ஒரு தலைநகரைக் கட்டுகிறார்கள். இதற்கு மத்திய அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி உதவிபுரிகிறது. அந்தப் புது தலைநகரில் பெரும்பான்மையான மாளிகைகளும், மண்டபங்களும் அரசாங்க உயர்தர அதிகாரிகளுக்காக மட்டும் கட்டப்படுகின்றனவாம். அரசாங்கச் செலவில், அதிகாரிகளுக்கு வசதிகள் நிறைந்த இருக்கைகள் தயாரிக்கப்படுகின்றனவாம்.

கவர்னர் தங்க 25 லட்சம் ரூபாயில் ஒரு மாளிகை கட்டப்படுமாம்!

அது போதாதென்று பல லட்சங்களைப் பாழ்படுத்தும் வகையில் கவர்னருக்காக இரண்டு அரசாங்க மாளிகைகள் தற்காலிகமாக கட்டப்பட்டுள்ளனவாம்.

இவற்றையெல்லாம் பஞ்சாப் மாநில சட்டசபையில் வரவு-செலவு திட்ட விவாதத்தில் காங்கிரஸ்காரர் ஒருவரே-அவர் பெயர் தர்பாலிலால் குப்தா-வெளியிட்டார். எதிர்க்கட்சி அங்கத்தினரல்ல, காங்கிரஸ் அங்கத்தினரே ஆட்சியாளர்கள் நடத்தும் அலங்கோலங்களைக் காணச் சகியாது கூறியுள்ளார்.

ஏழைப்பங்காளர்கள் எனக் காங்கிரசுக்காரர்கள் ஆட்சிக்குச் சென்றார்கள், ஆனால் அவர்கள் ஆட்சியில்தான் ஆடம்பரங்கள் மிகுந்துள்ளன. அவர்கள் ஆட்சியில்தான் கவர்னருக்குப் பத்துலட்சம் சம்பளம் தரப்படுகிறது; 20 லட்சம், 30 லட்சத்துக்கு மாளிகைகள் கட்டித் தரப்படுகின்றன.

மக்களின் வரிப்பணத்தை வாங்கி, "வெள்ளையானைக்கு, அரசாங்க அதிகாரிகளின் ஆடம்பரத்துக்கு" செலவழிக்கப்படுவதை பஞ்சாப் காங்கிரஸ் எம். எல். ஏ, வான தர்பாரிலால் குப்தா அவர்கள் கண்டித்துவிட்டு, கடைசியாக "காங்கிரஸ் பெருமையுடன் பேசும் சமதர்ம ஆட்சிமுறை இதுவா?" என்று கேட்டுள்ளார்.

காங்கிரஸ் ஆட்சியில், மின்சார இலாகாவில் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு 50 லட்சம் ரூபாய் வீணாகிறதாக அவர் கூறுகிறார். மேலும் ஆட்சி எல்லா துறைகளிலும் திறமையாக நடத்தப் பட்டால், 3 கோடி ரூபாய் மிச்சப்படும் என அந்தக் காங்கிரஸ்காரர் கூறியுள்ளார். ○

சட்டசபையில் அண்ணா!

பம்பாயிலிருந்து வெளிவருகிற "கரண்ட்" என்ற பத்திரிக்கை, அறிஞர் அண்ணா அவர்களின் சட்டசபைப் பேச்சைப்பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

"சென்னை சட்டசபையில் அண்ணாதுரை அவர்கள் வந்திருப்பது மிகச் சரியானதே. அவருடைய பேச்சு, சட்டசபை அங்கத்தினர்களை மட்டுமல்ல, மந்திரிசபையினரையும் ஈர்ப்பதாக இருக்கிறது.

சட்டசபைத் தலைவரை வரவேற்று அண்ணாதுரை அவர்கள் பேசிய முதல் பேச்சு, பேச்சுக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு என்று கூறலாம். அவருடைய அரசியல் கொள்கை மாறுபட்டதாக இருந்தபோதிலும், அந்தப் பேச்சு ஒன்றே அவருடைய தமிழ்ப் பண்பாட்டின் உயர்வான தன்மையை நன்கு காட்டியது. கண்ணியம், தெளிவான கருத்து, பண்பாடு இவைகளை உள்ளடக்கியதாக அவருடைய பேச்சு இருந்தது.

அண்ணாதுரை அவர்கள் கலந்துகொள்வதால், சட்டசபை நடவடிக்கைகளின் தரம் உயரும் என்பது உறுதி!"

மன்றம்

ஞாயிறு 19—5—57 சென்னை

கைத்தறிக்குக் கைகொடுங்கள்!

இந்திய அரசியலாரின் உதவியுடன், கைத்தறி வாரம் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கைத்தறியின் மேன்மை, கைத்தறி ஆடைகளின் அழகு, கைத்தறியில் புதுவேலைப்பாடுகள், இப்படிப் பலர் பேசினர்கள். கைத்தறி கண்காட்சிகள் திறக்கப்பட்டன, பாட்டுக் கச்சேரிகள், நாடகங்கள் நடத்தப்பட்டன. ஒருவாறாக விழா முடிந்தது.

மார்கழி மாதம் தொடங்கினால் பஜனை மடத்தில் பரபரப்பு இருக்கும், மூலையில் தூசிபடிந்த மத்தளம் வெளி வரும், ஆர்மோனியம் தேடப்படும், அன்பர்கள் கூடுவார்கள், பல்லாண்டு பாடுவார்கள்! அந்த மாதம் முடிந்ததும் மத்தளமும் ஆர்மோனியமும் பழைய இடங்களுக்குப்போகும், பஜனைமடம் மூடும். அத்துடன் அடுத்த ஆண்டு மார்கழி மாதம் வரை மடத்தைப் பற்றி யாரும் கவலைப்படமாட்டார்கள்.

கைத்தறி வாரமும் ஆண்டிற்கு ஒரு முறை வந்து போகிறது. ஒரு வாரத்தில் ஏராளமான வாழ்த்துகள், பேச்சுகள், திட்டங்கள், தரப்படுகின்றன. இவற்றை நாம் குறைகூறுவதாக யாரும் நினைக்கக்கூடாது. கைத்தறி வாரத்தின்போது தரப்படும் நம்பிக்கை பின் நீடித்து நிற்பதில்லை. அரசாங்கம் வேண்டுமென்று, ஏமாற்றுதலுக்காக ஒரு வாரத்தைக் கொண்டாடிவிட்டு, பின் அயர்ந்துவிடுகிறது என்று சொல்லமுடியாது. கைத்தறியாளருக்குப் பாதுகாப்புத் தரவேண்டுமென்ற எண்ணம் இருக்கிறதே தவிர, பாதுகாப்புத் தருவதற்கு என்ன செய்யவேண்டும் என்பதில் நிலையான கொள்கை, தெளிவான திட்டம் இந்திய அரசாங்கத்துக்குக் கிடையாது.

தென்னாட்டில் ஒரு சமயம் கைத்தறி ஆடைகள் வாங்குவாரின்றி குவிய, கைத்தறியாளர்கள் வேலையின்றி ஊர் ஊராக வேதனை உருவங்களாகச் சுற்ற, கைத்தறித் தொழிலே நசித்துவிடும் என்ற நிலை பிறந்தது. அப்பொழுது, காலத்தினாற் செய்த உதவியாக, திராவிட முன்னேற்றக் கழகம் கைத்தறி ஆடைகளை விற்று, கைத்தறிக்கு நாட்டுமக்களிடை புதியதொரு இடத்தைப் பெற்றுத் தந்தது. அப்பொழுது கைத்தறி எழுந்து நடமாடும் வலிவு பெற்றது. ஆனால் மக்களிடை பெற்றுள்ள ஆதரவும், அரசியல் கட்சிகள் தனிப்பட்ட முறையில் காட்டும் அக்கரையும், இவை மட்டும் கைத்தறிக்கு நீடித்த பாதுகாப்பைத் தந்துவிடமுடியாது. நாட்டுத் தொழில் வகைகளில் ஒன்று என்ற முறையில், இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு அது சோறிடுகிறது என்ற வகையில், நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ளவர்கள் அதற்குத் தெளிவான, உறுதியான திட்டங்களை ஏற்று நடத்த வேண்டும்.

காங்கிரஸ் அரசாங்கமோ, கைத்தறியைப் பொறுத்த வரையில் தெளிவான கொள்கை எதையும் கடைப் பிடிக்கவில்லை. கட்சிக் கூட்டத்தில் கதர்ப்பிரசாரம் செய்துவிட்டு. மில்முதலாளிகளைப் பார்த்ததும் அவர்களுக்கு வேண்டிய திட்டங்களைத் தீட்டிவிட்டு, போகிற வழியில் நெசவாளர்களைப் பார்க்கும்பொழுது அவர்களுக்கு கைத்தறி வாரம் ஒன்றும் கொண்டாடிவிட்டால், கைத்தறியாளர் பிரச்சினை தீர்ந்துவிடாது.

அறிஞர் அண்ணா அவர்கள் சென்னையில் நடைபெற்ற கைத்தறி வாரக் கூட்டத்தில் குறிப்பிட்டதுபோல, கைத்தறிக்கு உதவவேண்டுமென அரசாங்கம் நினைப்ப... உண்மையானால், "கைத்தறிக்கு ஏற்படும் போட்டிகளை... தவிர்க்கவும், ஆபத்துக்களைத் தடுக்கவும் அரசாங்... என்ன செய்யப் போகிறது?"

கைத்தறிக்கு உண்மையில் பாதுகாப்பளிக்க வேண்... மென்றால், "கரைபோட்ட வேட்டி, சேலைகளை கைத்தறிக்கென ஒது...கும் தீர்மானத்தை இந்திய அரசாங்கம் அமுலாக்கவேண்டும்." இன... சென்னை மாநில சட்டசபை எல்லாக் கட்சியினரு... ஒருமனதாய் நிறைவேற்ற மத்திய அரசாங்கத்துக்கு... அனுப்பிவைத்தது. இதுகாறும் மத்திய அரசாங்க... அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றவில்லை. கைத்தற... வாரங்கள் ஆயிரம் கொண்டாடுவதைவிட, கண்காட்சிக... ஆயிரம் திறப்பதைவிட, அந்த ஒரு தீர்மானத்தை நிறை...வேற்றினால்போதும், கைத்தறியாளர் குறைதீர்க்க! மத்திய... அரசாங்கம் அதைச் செய்யுமா? மாநில அரசாங்க... அதற்குப் போராடுமா?

அணுச்சக்தி

அணுச் சக்தியின் காலம் ஆரம்பமாகிவிட்டதாக... கூறுகிறார்கள். விஞ்ஞான வளர்ச்சியால் நீராவி... மின்சாரம், மின்காந்தம் இவைகள் ஒவ்வொன்றாக... தொழில் துறையில் ஈடுபடுத்தப்பட்டன. இதற்குமுன்... கிடைத்திராத புதுமைகளும் நன்மைகளும் அவற்றா... கிடைத்தன. அணுச்சக்தியின் ஆற்றலை வெளிப்படுத்த... விஞ்ஞானிகள் பல காலம் பாடுபட்டனர், கடைசியா... வெற்றி கண்டனர்.

ஆனால் உலக வல்லரசுகள் அந்த விஞ்ஞான... வெற்றியை உலக வாழ்வுக்காகப் பயன்படுத்தத் தவற... விட்டன. அணுச்சக்தியின் உதவியால் எவ்வளவு தூர... அழிவுகளை உண்டாக்கலாம் என்பதில்தான் போட்டி...யிட்டுக்கொண்டு பயங்கர அழிவுக் கருவிகளை உண்டாக்கி... கொண்டிருக்கின்றன. முதலில் அணுக்குண்டு என்பதை... வெடித்தார்கள். சப்பான் நாட்டில் ஒரு நகரம் அதனா... அழிந்தது, பல்லாயிரக்கணக்கான மக்கள் வெந்து... மாண்டனர், லட்சக்கணக்கானவர்கள் உடல் முகம் கா... கைகள் சிதைக்கப் பட்டு, அணுக்குண்டு வெடித்ததின்... ஞாபகார்த்தமாக அங்கு உள்ளனர். அணுக்குண்டுதான்... அவ்வளவு பயங்கரமானதென்றால், "அணுக்குண்டைவி... நூறுமடங்கு அழிவை உண்டாக்கும் மற்றொரு குண்டு... இதோ!" என்று நீர்வாயுக்குண்டுகளைக் கொண்... வந்தார்கள்.

அணுச்சக்தியைக்கொண்டு அழிவு வேலைக்கான... குண்டுகளைச் செய்வதில் வல்லரசுகள் போட்டியிட்டு... கொண்டு செய்கின்றன. அமெரிக்கா, ருஷ்யா, இங்கிலாந்... மூன்றும் தங்கள் பலத்தை, அடுக்கி வைத்திருக்கு... அணுக்குண்டுகளைப் பார்த்துக் கணக்கிட்டுக் கொ...கின்றன.

விஞ்ஞான வளர்ச்சியையும், நாட்டின் செல்வத்தையு... மக்களின் உழைப்பையும் நேரத்தையும் அணுக்குண்... களைச் செய்வதில் வல்லரசுகள் செலவிடுவது மட்டுமல்ல... செய்த குண்டுகளை எப்படியிருக்கிறது பார்க்கலாம் என்... அடிக்கடி வெடித்துப் பார்த்துக்கொள்கின்றன. நிவாட... என்ற பாலைவனப் பிரதேசத்தில் அமெரிக்கா தான்செய்... குண்டுகளை வெடிக்கிறது. சைபீரியாவில் ருஷியா தன... அணுக்குண்டுகளை வெடிக்கிறது. பசிபிக் மாகடலி... இருக்கும் தீவுகளில் இங்கிலாந்து குண்டுகளை வெடித்து... பார்க்கிறது. இவைகளுடைய அடிப்படை நோக்கமெல்லா... யாரிடமுள்ள அணுக்குண்டு அதிக பயங்கரமானது... அதிகமான அழிவைத் தரவல்லது என்பது தான்.

இதுவரை அமெரிக்கா 46 அணுக்குண்டுகளை வெடித்... விட்டது. ருஷியாவில் எவ்வளவு வெடித்தார்கள் என்ப... வெளியுலகுக்குத் தெரியாது. அமெரிக்காவைப் போட்...யிட்டு அதிகமாக அது வெடித்திருக்கக் கூடும்.

ஒரு அணுக்குண்டு அல்லது நீர்வாயுக்குண்டு போட...பட்டால், பெரிய நகரங்கள் அப்படியே சாம்பலாகி ப... மைல்கள்வரை பாலைவனமாகிவிடும் என்கிறார்கள். இ... குண்டைக் காலத்தில் பெரிய நாடுகளாயிருந்தாலு... சிறிய நாடுகளாயிருந்தாலும், அணுக்குண்டு போர் ஏற்ப...

...ால் அழிவு சொல்லமுடியாத அளவு ஏற்படும்.

சண்டைக் காலத்தில் மட்டுமல்ல, அமைதியான காலத்திலும் அணுக்குண்டுகள் அழிவை உண்டாக்காமலில்லை. மூன்று வல்லரசுகளும் போட்டியிட்டுக்கொண்டு அணுக்குண்டுகளை வெடிப்பதால், அணுச்சக்திகள் சிதறி, வானத்தில் நிறைந்து, நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ளவர்கள் மீதுபட்டு, பலவித நோய்களையும் பலவீனங்களையும் உண்டாக்குகின்றன. கருவிலுள்ள குழந்தையைக் கூட, இந்த அணுக்கள் பாதிக்கும் என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். சண்டைக் காலத்தில் போடுகிற அணுக்குண்டாவது ஒரேயடியாக மக்களைக் கொன்று அழித்து விடும், சமாதானகாலத்தில் பரிசோதனைக்காகப் போடுகிற குண்டுகள் பக்கத்து நாட்டு மக்களை கொஞ்சங் கொஞ்சமாக சித்திரவதை செய்து கொல்கின்றன!

ஏழை மக்களுக்கு காற்று ஒன்றுதான் இனமாக, நல்லதாகக் கிடைத்து வந்தது, ஆனால் அணுக்குண்டுகளை வெடித்துக்கொண்டே போனால் காற்று நச்சுமயமாகலாம். "நல்ல காற்று" விலை கொடுத்தாலும் சுலபத்தில் கிடைக்காத பொருளாகலாம்.

அணுக்குண்டுகளை வெடிப்பதால் எந்த அளவுக்கு காற்று தூய்மையற்றதாகி, ஆபத்துக்களைத் தரும் என்பதில் பலர் பலவிதமாகச் சொல்கிறார்கள். ஆனால் அணுக்குண்டுகளால் காற்று தூய்மையிழந்து, கெடுதலை பயக்கும் தன்மையடைகிறது என்ற அடிப்படையை யாரும் மறுக்கமுடியாது. இதனால் தான் நோபல் பரிசுபெற்ற விஞ்ஞானிகளும், பெரியவர்களும் ஒன்று கூடி, அணுக்குண்டுகளைத்தயாரிப்பதும் வெடிப்பதும் கூடாது எனக் கூறுகிறார்கள்.

உலக வல்லரசுகள் இப்பொழுது அணுச்சக்தியை அழிவுக்கருவிகளில் பெரிதும் பயன்படுத்துகின்றன. அந்த நிலை மாறி, உலகத்தின் ஆக்கவேலைகளுக்கும் அணுவைப் பயன்படுத்தலாம்.

வல்லரசுகள் அணுக்குண்டு தயாரிப்புகளைக் கைவிடுவதாயில்லை, ஒருபுறம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. மற்றொரு புறத்தில் அணுகுண்டுகள் வெடித்தபடி இருக்கின்றன. ஆக அணுக்குண்டு கூடாது என்பதில் ஐக்கிய நாடுகள் சபை முன்னின்று உறுதியான திட்டத்தை உண்டாக்கி, உறுதியான முறையில் அதை நிறைவேற்ற வேண்டும். அணுக்குண்டிலிருந்து உலகைப் பாதுகாக்க, உலகிலுள்ள எல்லா நாடுகளும் உடன்பாடு காணவேண்டும். இல்லையேல் உலக அழிவுக்கு அணுச்சக்தி ஆரம்பமாக இருக்கலாம்.

அணுக்குண்டு போர் ஏற்பட்டால் எந்த அளவுக்கு அழிவு சூழும் என்பதற்கு காலஞ் சென்ற விஞ்ஞான மேதை ஐன்சுடைன் கூறியது குறிப்பிடத்தக்கது. "மூன்றாவது உலகப்போர் மூண்டால் எத்தகைய கருவிகள் உபயோகப்படுத்தப்படும்?" என்றுசிலர் ஐன்சுடைனைக் கேட்டார்களாம். "சொல்ல முடியாது. ஆனால் நான்காவது உலகப்போரில் உபயோகப் படுத்தப்படும் கருவிகளைப் பற்றிச் சொல்ல முடியும்" என்றார் அவர். "என்ன அவை?" என்றார்கள். "கற்கள்!" என்றார். ஐன்சுடைன் கருத்துப்படி மூன்றாவது உலகப்போர் மூண்டு அணுக்குண்டுகள் உபயோகப் படுத்தப் பட்டால், அதில் உலகின் நாகரிகம், பண்பாடு, அறிவு, ஆற்றல் இவைகளையுடைய மக்கள் இனம் அப்படியே அழிந்து விடும். அதற்கடுத்தபடி புதிய மனிதர்கள் உண்டாகி, கற்காலத்திலிருந்து வரலாற்றை ஆரம்பிப்பார்கள் என்பதாகும்.

அணுக்குண்டு தயாரிப்பதைத் தடுத்து, வெடிப்பதை நிறுத்துவதால், உலகம் காக்கப்படும். அத்துடன் பலன் தரும் பல முன்னேற்றங்களை அணுச்சக்தியின் மூலம் பெறவும் முடியும்!

வினா: சென்னை சட்ட மன்றத்தில் கவர்னர் துவக்கவுரை ஆற்றிய போது கம்யூனிசுட்டுக்கள், சோசியலிசுட்டுக்கள், பிரசா-சோசியலிசுட்டுக்கள் ஆகியோர் வெளி நடப்பு செய்ததைப்போல் ஏன் திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்யவில்லை?

விளக்கம்: தமிழக (சென்னை) சட்ட மன்றத்திலிருந்து அந்த மூன்றுக் கட்சியினரும் வெளி நடப்பு செய்ததற்குக் காரணங்கள் இரண்டாகும் என்று அவர்களால் சொல்லப்படுகின்றன. அவை (1) மே நாளுக்கு விடுமுறை வழங்காமல் சட்ட மன்றத்தைக் கூட்டியது (2) சட்ட மன்ற உறுப்பினர்களின் கருத்தறியாமல் சென்னை மவுண்ட்ரோடிலிருக்கும் சட்ட மன்றக் கட்டிடத்தை விட்டு விட்டுக் கோட்டையிலுள்ள சட்ட மன்றக் கட்டிடத்திற்கு சென்றது ஆகும்.

சட்ட மன்ற பிரசா சோசியலிசுட்டுக் கட்சியினர் தி. மு. க. போன்ற மற்ற எதிர்க்கட்சியினரைக் கலக்காமல் மேற் கூறப்பட்ட இரண்டு காரணங்களுக்காக வெளி நடப்பு செய்யப் போவதாக முன் கூட்டியே செய்தித்தாள்களில் அறிக்கை வெளியிட்டு விட்டனர். எதிர்க்கட்சிகள் பலவற்றினிடையே நல்ல உறவும், நல்ல தொடர்பும் நிலவும், எதிர்க்கட்சிகள் கூடி நின்று ஒற்றுமையாய்ப் பணியாற்றவும் வேண்டுமானால கலந்து முடிவு செய்யும் பழக்கம் மிக மிக இன்றியமையாததாகும். ஒரு கட்சி யாரையும் கலக்காமல் தானே செய்து கொண்ட முடிவை மற்ற கட்சிகளும் ஏற்றுக் கொண்டே தீர வேண்டும் என்று வற்புறுத்துமானால் அது நல்ல பண்புமாகாது முறையுமாகாது. இந்த முறை மேற்கொள்ளப்படவில்லை என்பதற்காக மட்டுமேயல்ல தி. மு. கழகம் வெளி நடப்பு செய்யாமலிருந்தது.

பிரசா-சோசியலிசுட்டுக்களும் கம்யூனிசுட்டுக்களும் தி. மு. க. சட்ட மன்றக் கட்சித் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களை அணுகித் தங்கள் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அவர்கள் கூறியபோது, அறிஞர் அண்ணா அவர்கள் "மே நாளுக்கு விடுமுறை அளிக்க வேண்டும் என்றும், அன்று சட்ட மன்றத்தைக் கூட்ட வேண்டாம் என்றும் அரசியலார்க்கு முறைப்படி வற்புறுத்திக் கூறி, அரசியலாரும் மமதை எண்ணத்தோடு அதனை மறுத்துக் கூறியிருப்பார்களேயானால், நாம் எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகத்தான் வெளி நடப்பு செய்வதில் பொருள் இருக்க முடியும். அந்த முறைப்படியான முயற்சியை நாம் எடுக்காமல், வெளியேற்றத்தை மட்டும் மேற்கொள்வது அவ்வளவு ஏற்றதாகப் படவில்லை. எனவே முதற் காரணம் பொருத்தமான ஒன்றாகத் தோன்றவில்லை. சட்ட மன்ற உறுப்பினர்களைக் கலக்காமல் சட்ட மன்றக் கட்டிடத்தை மாற்றியதைக் காரணமாகக் காட்டி வெளி நடப்பு செய்வது பொருத்தமானது தான், ஆனால் கவர்னர் உரையைப் புறக்கணித்து வெளி நடப்பு செய்கின்ற நாம் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதங்களிலும் கலந்து கொள்ளக் கூடாது. நன்றி தெரிவிப்பு நிகழ்ச்சி முடிந்த பிறகு சட்ட மன்ற நடவடிக்கைகளில் இறங்குவதுதான்முறை. இதற்கு உங்களுடைய இசைவு உண்டு என்றால் என்னுடைய கட்சியும் அந்தப்படி நடந்து கொள்ளும்" என்னும் கருத்துப்படக் கூறியபோது, "கவர்னர் உரை மீது நடைபெறும் விவாதங்களில் கலந்துகொள்ளத்தான் வேண்டும்" என்று மற்ற கட்சியினர் கூறினார்கள். "கவர்னர் உரையைக் கேட்க மறுத்து விட்டுப் பிறகு அதற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தைத் திருத்தத்தோடு கொண்டு வர முற்படுவது போன்ற அரசியல் நாடகத்தை நடத்திக்காட்ட நானும் எனது கட்சியினரும் ஒருப்படமாட்டோம். கட்டிடத்தை மாற்றியது கண்டிக்கத்தக்கதாகும் என்பதைக் கவனர் உரையின் மீது நடத்தப்படும் விவாதத்தின்போது உணர்த்திக் கொள்ளலாம் என்று கருதுவதால், வெளி நடப்பின் மூலம் உணர்த்த நாங்கள் விரும்பவில்லை" என்னும் கருத்துப்பட மேலும் தெளிவுரை தந்தார்கள்.

வெளி நடப்பு செய்வதில் பொருள் ஏற்பட வில்லை என்ற காரணத்தால் தான் தி. மு. க. சட்ட மன்றக் கட்சியினர் அந்தச் செய்கையை மேற்கொள்ளவில்லையே ஒழிய, மற்ற உடன் நிற்கும் எதிர்க்கட்சிகளை மதிக்கக் கூடாது என்பதோ, அவர்களோடு சேர்ந்து பணியாற்றக் கூடாது என்பதோ அல்ல என்பதை வினா எழுப்புவோர் உணர்வார்களாக.

—இரா. நெ

பத்து ஆண்டுகளில் பஞ்சம் வந்த கணக்கு

"கடந்த பத்து ஆண்டுகளில் இந்த ஆண்டுதான் தென்னிந்தியாவில் மழையின்மை காரணத்தினால் தோன்றும் பஞ்சம் ஏற்படாமல் இருக்கிறது." என்று மத்திய அரசாங்கத்து உதவி மந்திரி எம். வி. கிருஷ்ணப்பா பெங்களூரில் கூறியுள்ளார். பத்து ஆண்டுகளில் இந்த ஆண்டுதான் தென்னிந்தியாவில் பஞ்சமில்லை என்பதால், கடந்த ஒன்பது ஆண்டுகள் பஞ்சத்தால் இந்தப் பகுதி பீடிக்கப்பட்டது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது பத்து ஆண்டுகளில் ஒரு ஆண்டுதான் நிம்மதி வருகிறது, அதுவும் அரசாங்கத்தின் ஏற்பட்டால் அல்ல, வானம் பார்த்து மழை பெய்த காரணத்தால்!

மடிப்பிச்சை ஏந்தும் மாதா, கொடிகட்டி ஆளும் மகன்!

விந்தியவரம்பன்

இலங்கை அழைத்திருக்கிறதாம் இந்தியப் பிரதமர் நேருவை. ஏறத்தாழ ஓராண்டுக்காலமாக இலங்கை முழுதும் நடைபெற்று வரும் புத்தர் ஜயந்தி விழாவின் இறுதி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவே இந்த அழைப்பு அவருக்கு அனுப்பப்பட்டிருக்கிறதாம். இலங்கை மட்டுமா அழைக்கிறது அந்த அலகாபாத்பண்டிதரை, ஆசியாவின் ஜோதியை—அகில உலகமே அழைக்கிறது, வாரீர் பாரதத்தின் முடிசூடா மன்னரே, வருகை தாரீர் எமது நாட்டிற்கு என்று எந்த நாடுதான் அழைப்பு விடவில்லை. உலகின் வல்லரசுகள் அவர் நட்பைப் பெறுவதிலே நான் நீ என்று போட்டி போடுகின்றன. ஐசனோவர் அவருடன் நட்புக் கொள்வதில் அடைகிற அகமகிழ்ச்சியும் புல்கானின் அடைகிற புளகாங்கிதமும் அவனி அறியாத ஒன்றா என்ன? என்று வெற்றிப்புன்னகையோடும் வேகத்தோடும் கேட்டிடும் காங்கிரஸ் நண்பர்கள் இருப்பதையும் நாம் மறந்து விடவில்லை.

இந்திய நாட்டிலே பிறந்து, ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே அவனி முழுவதற்கும் அன்பும் அறநெறியும் போதித்த புனிதராம் புத்தர் விழாவில், அதே மண்ணில் பிறந்து அன்பு அறநெறி என்ற அடிப்படையில் பஞ்சசீலம் பாருக்கெல்லாம் போதித்துவரும் பண்டிதநேரு கலந்து கொள்வதில் பொருளும் பொருத்தமுமில்லையோ, மதியிலிகாள் என்று அவர்தம் தூக்கிய புருவத்தினுல் வினவெழுப்புவதையும் நாம் மறந்து விடவில்லை. நாம் இங்கே ஆராய்வது, அலகாபாத் மைந்தரின் தரம், திறம், அவருக்கு அகில உலக அரங்கிலே இன்றிருக்கும் புகழ் இவை பற்றி அல்ல. இப்படிப்பட்ட அகில உலக செல்வாக்குப் பெற்ற அந்த உத்தமரால், அழுத கண்ணீருடன் வேதனை விழா நடத்தும் இலங்கை இந்தியருக்கு இதுவரையிலே என்ன சாதிக்க முடிந்தது என்பது பற்றித்தான்.

புத்தர் விழாவிலே கலந்து கொள்ளச் செல்லும் பண்டிதருக்கு இலங்கை மகத்தானதொரு வரவேற்பு தரக் காத்திருக்கிறதாம், செய்திகள் தெரிவிக்கின்றன. அத்தகைய வரவேற்பு இலங்கையில் இதுவரை யாருக்குமே கிடைத்தது கிடையாதாம். ஏன், நேருவே கூட கண்டிராத அளவுக்கு ஏற்பாடுகள் தடபுடலாக இருக்குமென்றும் பார்வையாளர்கள் கூறுகின்றனராம். சென்ற தடவை நேரு சென்றபொழுது அப்பொழுது அதிகாரத்திலிருந்தவர்கள், அசூயை காரணமாக, எங்கே இந்த ஒளிப்பிழம்பின் முன்னுல் நாம் மின் மினிகளாகி விடுவோமோ எனப்பயந்து, பொதுமக்களோடு தொடர்பான நிகழ்ச்சிகளையே ஏற்பாடு செய்யாமல் இவரை அனுப்பிவிட்டனராம். ஆனால் இன்று அதிகாரத்திலிருக்கும் பண்டார நாயகா பரந்த மனப்பான்மையுடன் மிக விரிவான அளவில் பொதுமக்கள் பெருவாரியாக கலந்து மகிழத்தக்க அளவில் ஏற்பாடுகள் செய்ய இருக்கிறாராம். இந்தத் திங்கள் 17ந்தேதியன்று கொழும்புசென்று, மறுநாள் அங்கிருந்து புதிதாய்க் கட்டப்பட்டிருக்கும் அழகு நகரமாம் அனுராதபுரம் சென்று அதனைத் திறந்து வைத்துவிட்டுத் திரும்பவும் கொழும்பு வர இருக்கிறாராம். கொழும்பு நகர மன்றவரவேற்பில் கலந்து கொள்வதோடு பாராளு மன்றத்திலும் விரிவுரையாற்றுவாராம்பண்டிதர். புத்தர் ஜெயந்தி விழாவை முன்னிட்டு 19ந் தேதி பொதுமக்கள் கூடும் பெருங்கூட்டம் ஒன்றில் பேசுவதற்கும் ஏற்பாடாயிருக்கிறதாம். இவ்வளவு நிகழ்ச்சிகளும் ஒன்றுக்கொன்று இடைவெளி நேரம் இல்லாதபடி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற காரணத்தால், பண்டிதரும், பண்டார நாயகாவும் இலங்கை இந்தியர் பிரச்சினை பற்றிப் பேசுவதற்குக்கூட நேரமிருக்காதாம். எனவே கொழும்பிலிருந்து அனுராதபுரம் செல்ல இருக்கும் நேரத்தில் — அதாவது புகைவண்டியில் செல்வதற்கு நான்கு மணி நேரமாகுமாம் அந்த நேரத்தில் பல பிரச்சினைகள் பற்றி இரு நாட்டுப் பிரதமர்களும் விவாதிக்கக்கூடுமாம். பல்வேறுநிகழ்ச்சிகளின் நெருக்கடியிலும் கிடைக்கின்ற கொஞ்ச அவகாசத்தையும் எப்படிப் பயன்படுத்துகிறார் பாருங்கள் அந்த மாந்தருள் மாணிக்கம் என்று பூரிப்போடு சொல்லிக்கொள்ள வேண்டுமானுல் இது பயன்படலாமே தவிர இதனுல் ஏற்பட இருக்கின்ற பலனைப் பற்றித்தான் நாம் கவலைப் படுவதெல்லாம்! இடையிலே கிடைக்கிற நாலு மணி நேரத்தையும் பண்டிதர் பயன் படுத்திக் கொள்வதாக வைத்துக் கொண்டாலும், அதில் எத்தனை எத்தனைப் பிரச்சினைகளைத்தான்பேசுவார். அகில உலகில் அணு ஆயுதங்களால் ஏற்பட்டிருக்கும் பயங்கரமான கேடுகள், உலக அரங்கில் ஆசியநாடுகள் அனுசரிக்க வேண்டிய கொள்கைகள், காமன்வெல்தில் இரு நாடுகளும் நீடிக்க வேண்டியதின் அவசியம், காஷ்மீர் பிரச்சினையில் ஏற்பட்டிருக்கும் சிக்கல், சூயஸ் பிரச்சியில் ஏற்பட்டிருக்கும் முடிவு, ஜோர்டானில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி போன்ற அகில உலகமுக்கியத்துவம் வாய்ந்த பலபிரச்சினைகளைப் பேசுகின்ற அந்தப் பெரியமனிதருக்கு கேவலம் இலங்கை இந்தியர் பிரச்சினை பற்றிப் பேச நேரம் எங்கே இருக்கப் போகிறது. அப்படிப் பேசினுலும் தான் விருந்தினராகச் சென்றிருக்குமிடத்தில் அதிலும் ஒரு இந்தியர் என்றும்பாராமல், தம்பால் அன்பும் மரியாதையும் வைத்து ஒரு திருநகரை திறந்து வைக்கும் பெரும் பொறுப்பையே தந்திருக்கும் அந்தப் பிரதமரிடமா நீர் செய்வது தவறு, அடாது என்று பேசமுடியும், அப்படிப் பேசுவதுதான் நாகரீகமாகுமா, வேண்டுமானுல் ஜாடைமாடையாக உங்கள் நல்லெண்ணத்தில் நான் நம்பிக்கைவைத்திருக்கிறேன், நம்முடைய இலங்கை இந்தியர் பிரச்சினை இந்த முறையிலேயே சுமுகமாக தீரவேண்டுமென்பது என் அவா என்று கூறலாம். நல்லெண்ணம் இல்லாமலா இத்தனை வரவேற்பும் வைபவமும் என்று பண்டாரநாயக கேட்கமாட்டார், அவர் பார்க்கும் பார்வைக்கு வேறென்ன பொருள் கற்பிக்கமுடியும்.

அனுராதபுரம் என்ற அந்த அழகிய நகரம் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் ஒன்று என்றாலும், அது இன்று அமைக்கப்பட்டிருக்கிற இடம், கிருத்து பிறப்பதற்கு முன்பே கீர்த்தியுடன் விளங்கிய அனுராதபுரம் என்ற பண்டைப் பெரு நகரம் இருந்த இடமாம். அதன் அழிவுச் சின்னங்களின் அருகே கட்டப்பட்டிருப்பது தானும் இந்தப் புதிய நகரம். சிங்களவர் ஆட்சியின் முதல் தலை நகராக இருந்த இடமாம் அந்த அனுராதபுரம் இப்பொழுது பிரதமராயிருக்கும் பண்டார நாயகா அவர்களால் 1948ல் தொடங்கப்பெற்ற முயற்சியாம் இது. புதையுண்டு போன பழம் பெரு நகரத்தின் மேலே எழுப்பப்பட்டிருக்கும் இந்தப் பொலிவு விளங்கும் நகரம் ஏறத்தாழ பத்தாண்டுக்காலமாகக் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறதாம். இந்தத் திரு நகரை திறந்து வைக்கும் பொறுப்பைத்தான் இந்தியப் பிரதமர் ஏற்றிக்கொண்டிருக்கிறார். இந்த நகரத்திற்குச் செல்லும் நெடும்பாதைக்கும் பண்டிதரின் பெயர் வைக்கப்படும் என்று கூறப்படுகிறது. இன்னோரன்ன சிறப்பு மிக்க வைபவத்தில் கலந்து கொள்வது, இந்தியாவுக்கு பெருமிதம் தருவதாக வன்றோ அமையும் என்று கேட்கக் கூடும்.

கிருத்து பிறப்பதற்கு முன்பே புகழுடன் பொலிவுடன் விளக்கிய அந்த நகரத்தில் புதைந்துபோன மாடமாளிகை கூட கோபுரங்களுடன் எத்தனைத் தமிழர்களின் புகழும் புதைந்திருக்கிறதோ யார் கண்டார்! யவனமும் சீனமும், கங்கையும் கடாரமும் ஈழமும், அந்நாள் தமிழர் தம் உறவைப் பெரிதும் விரும்பி ஏற்றதும் அவர் தம் வாணிபமும் பரவியிருந்ததும் பறைசாற்ற வல்ல பல்வேறு சான்றுகள் அந்த அனுராதபுரத்து மண்ணோடு மண்ணுகப் புதைந்து கிடக்கக்கூடும். அந்த அழிவுச் சின்னங்கள் பேசக்கூடுமானுல் எத்தனை எத்தனை ஆயிரம் கதைகள் சொல்லுமே. வீரமும், அறமும் ஒன்றையொன்று முந்த, அந்த நாள் பெருவேந்தர்கள் ஆண்டிருந்த காலத்தில், அனுராதபுரத்தின் தொடர்பு தமிழகத்திற்கு எவ்வாறெல்லாம் இருந்திருக்கக் கூடும் என எண்ணிப்பார்ப்பதற்குக்கூட முடியாத நிலையில் இன்றையத் தமிழர் நிலை ஆக்கப்பட்டிருக்கிறது என்று எண்ணும்போதே நெஞ்சம் கவலைக் கடலாகிறது.

இன்று இந்தியப்பிரதமருக்கு விழாக்கோலம் காட்டி வரவேற்பளிக்கும் இலங்கையில் தான் இந்தியனே வெளியேறு என்ற முழக்கம் நித்திய நாதமாகிவிட்டிருக்கிறது. ஏதோ சில விஷமிகளின் காட்டுக் கூச்சல் என்பதுபோல அல்ல நிலைமை. அரசாங்கத்தின் கொள்கையே அது தான் என்ற நிலை பிறந்தது விட்டிருக்கிறது. இரண்டு மூன்றுண்டுகளுக்கு முன்புகூட இந்தியர் தம் கடைகளெல்லாம் சூறையாடப்பட்டன, இந்தியர்கள் துன்புறுத்தப்பட்டனர். பெட்டா என்ற பகுதி முழுதும் பெரும் கலகச்

(9-ம் பக்கம் பார்க்க)

இரா. செழியன்

"நாட்டூர், நத்தைமேடு, முள்ளியாறு, முருங்கைபுரம்.."

கண்டக்டர் சத்தம் போட்டு, பஸ்ஸுக்கு ஆள் சேர்த்துக் கொண்டிருந்தான்.

"நாழியாயிட்டுதே. இன்னும் புறப்படலியோ?" என்று உள்ளே இருந்த குருக்கள் கோவிந்த தீட்சிதர் ஒரு குரல் கொடுத்தார். மணி 10 ஆயிற்று இன்னும் அரை மணி நேரமானல் இராகுகாலம் வந்துவிடும். இராகு காலத்துக்குள் புறப்பட்டுவிட்டால் நல்லது என்று அவசரப்பட்டு சொன்னார். குருக்கள் தமது அருமை மகள் லலிதாவை பட்டணத்திலிருக்கும் அவனுடைய அகமுடையான் ஆத்துக்கு நல்ல நாள் பார்த்துகொண்டு, போய் விடப் போகிறார். கோவிந்த தீட்சிதர் அந்தக் கிராமத்தில் பிரபல்யமானவர். பரம்பரையாக அந்த ஊர் சிவன் கோயிலில் வேலைபார்த்துவருபவர். பழுப்பேறியபஞ்சகச்சம், மேலே பட்டை போட்ட உத்தரியம், நெற்றியிலே சந்தனக் கோடு, காதிலே தொடுக்கப்பட்ட பூ, கழுத்திலே தொங்கிய நவரத்தின மாலை எல்லாம் அவரது ஆசார அனுஷ்டானங்களைக் காட்டின. ஆனல் அவரது பக்கத்திலிருந்த லலிதா, முற்றிலும் மாறுபட்டவளாய், பெயருக்கேற்றபடி லலிதமாகயிருந்தாள். அவள் கட்டியிருந்த ஆர்கண்டி சேலை, வெல்வெட் மேலுடை நீண்ட நெக்லசு, உருண்ட டோலக் முதலியவை பிறந்த இடம் பழைய பஞ்சாங்கமாயிருந்தாலும், புகுந்த இடம் நவ நாகரிகத்தில் முழுகியிருக்கிறது என்பதைக் காட்டின. அவளுடைய கணவனுக்கு வந்து அழைத்துப் போகமுடியாதபடி வேலையாயிருந்ததால் கோவிந்த குருக்களே மகளை, நல்லநாள் நட்சத்திரம் பார்த்து அழைத்துக்கொண்டு போகப் புறப்பட்டார். கோயில் வேலையிலிருந்து ஒருவாரத்துக்கு அவருக்கு ஓய்வு, செய்யவேண்டிய நியதிகளைத் தனது "அசிஸ்டண்ட்" அம்பிப் பையனிடம் சொல்லிவைத்திருந்தார். இருந்தாலும் இவர் இல்லாத ஒரு வாரத்தில் சிவன் கோவில் நிர்வாகம் கொஞ்சம் தாமதப்பட்டுதான் நடக்கும்.

சிவன் கோவில் நிர்வாகத்தில், கோவிந்த குருக்களுக்கு எதிரே உட்கார்ந்திருந்த ஐயாசாமி முதலியாருக்குத் தான் அதிகப் பொறுப்பு. ஐயாசாமி முதலியார் அந்தஊர்மிராசுதார். பெரிய சைவச் சிலர். தேவாரம் திருவாசகம் படித்து கோவிலிலிருந்து வருகிற பிரசாதத்தை வாங்காமல், சாப்பிட உட்கார மாட்டார். அவர் இருக்கிற கண்டிப்பால் தான், அந்த கிராமத்தில் ஆசாரங்களுக்கு மதிப்பிருக்கிறது என்று கூறலாம். வெட்டியான் கொண்டு வந்து போடுகிற விறகை, ஒரு முறை தண்ணீரில் நனைத்துக் காய வைத்து "தீட்டு" போனபின் தான் வீட்டுக்குள் எடுத்துப் போக அனுமதிப்பார் என்ருல் ஐயாசாமி முதலியார் எப்படிப் பட்ட ஆசாரக்காரர் என்பது தெரியும்! கோர்ட்டுக்குப் போக வேண்டியிருந்ததால், அவருடன் கிராமத்து கர்ணம் கனகசபைப் பிள்ளையும் வந்திருந்தார்.

"குருக்களையா! இராகு காலம் வர இன்னும் எவ்வளவு நாழியிருக்கு!"

கோவிந்த குருக்கள் தமது மகள் கட்டியிருந்த "ரிஸ்ட் வாட்சை" பார்த்தார்.

"பத்து இருபது, அப்பா!" அந்தக்கிளி மொழிந்தது.

"பத்து நிமிஷந்தானிருக்கு! அதுக்குள் கிளம்பமாட்டான் போலிருக்கே!"

"இராகுகாலத்திற்குள் புறப்பட்டாகணுமே, கோர்ட்டுக்கு போற அன்றைக்குத்தான இப்படி நேரமாகணும்!" கர்ணம் கனகசபைப் பிள்ளை வாரசூலை, கால கண்டங்களுக்கு மிகவும் பயந்தவர், கட்டுவதற்குச் செங்கல் சூளை போடுவதிலிருந்து, தான் முகச்சவரம் செய்துகொள்ளும் நாள் வரை பஞ்சாங்கத்தின் அனுமதியின்றி கனகசபைப் பிள்ளை எதுவும் செய்வதில்லை. ஏதாவது சந்தேகம் வந்தால், கோவிந்த குருக்கள் தரும் தீர்ப்புதான் கடைசி முடிவானது.

மிராசுதார் ஐயாசாமி முதலியார் குடும்பத்துக்கு கோவிந்த குருக்கள் தான் இராஜ குருவென்ருல், கனகசபை தான் மந்திரி! அவ்வளவு கட்டுப்பாடுடன், மிராசுதாரும், குருக்களும், கர்ணமும் அந்தகிராமத்தைப் பரிபாலித்து வந்தார்கள்; ஆசார நியமங்களைக் காப்பாற்றி வந்தார்கள்.

"நாட்டூர், நத்தைமேடு, முள்ளியாறு முருங்கைபுரம்.." கண்டக்டர் கந்தசாமி சத்தம் போட்டுக்கொண்டு வந்தான்.

டிரைவர் வீராசாமி ஏறிஉட்கார்ந்தான்.

கண்டக்டர் உள்ளே இருந்த பிரயாணிகளை எண்ணிப் பார்த்தான். மொத்தம் பதினெட்டு நபர்கள் தான் இருந்தனர். பஸ்ஸில் இருபத்தாறு பேர்கள்வரை ஏற்றலாம்.

"கிளம்பட்டுமா?" டிரைவர் கேட்டான்.

"இன்னும் ஐந்து நிமிசம்!" கண்டக்டர் கீழே குதித்தான்.

"இராகுகாலம் வந்துடுமே, சீக்கிரம் கிளம்பு!" குருக்கள் சொன்னார்.

"கிளம்பிடு!" மிராசுதார் டிரைவரிடம சொன்னார்.

டிரைவரும் காரை எடுத்தான். கண்டக்டர் படியில் நின்று கடைசித்தடவையாக "நாட்டூர் நத்தைமேடு, முள்ளியாறு..." என்று சத்தம் போட்டுப் பார்த்தான். இந்தத் தடவைப் போட்ட கூச்சலுக்குப் பலன் இல்லாமற் போகவில்லை.

பஸ் புறப்பட்டு நகரும் தருவாயில் ஒருவன் ஓடிவந்து ஏறிக்கொண்டான்.

"விடு!" கண்டக்டர் குரல் தந்தான்.

பஸ் வேகமாக ஓட ஆரம்பித்தது. உள்ளே கடைசியாக வந்தவன் உட்கார இடம் பார்த்தான். பஸ்ஸுக்குள்ளிருந்தவர்கள் அவன்மீது ஒருசேர தமது பார்வையைச் செலுத்திஞர்கள். அவர்கள் பார்வையில் அருவருப்பு, மிகவும் காணப்பட்டது. கடைசியாக உள் வந்தவன் சின்னன்; அந்த ஊருக்குப் பக்கத்திலிருந்த சேரியைச் சேர்ந்தவன்.

குருக்கள் கனைத்துக்கொண்டார், மிராசுதாரர் வெளியில் வெற்றிலைப் பாக்கு எச்சில்துப்பினர். "கண்டக்டர்" என்று கர்ணம் தயங்கிக்கொண்டு மெதுவாகக் கூப்பிட்டார்.

சேரியைச் சேர்ந்த சின்னனை ஏற்றிக்கொள்வதா என்ற யோசனைகண்டக்டர்கந்தசாமிக்கும் வந்தது. ஆனல் பஸ்ஸில் சரியான கூட்டம்சேராத இந்த சமயத்தில், அவனை இறக்கிவிட அவனுக்கு மனமில்லை.

பஸ்ஸில் இருந்தவர்கள் கட்டுப்பாடாக முறைத்துப் பார்த்தார்கள். அவர்களின் பார்வையே "சின்னன் ஒருதீண்டாதவன்; அவன் எப்படி ஏறலாம்?' என்று கேட்பது போலிருந்தது. சின்னன் அவற்றை லட்சியம் செய்யாமல் உட்கார இடம் பார்த்தான்.

குருக்களுக்குப் பக்கத்தில் ஒருஇடம் இருந்தது. குருக்கள் மிக அவசரமாகக் கீழேகிடந்த ஒருமூட்டையை எடுத்து அந்த இடத்தை அடைத்தார். மிராசுதார் தனது இரண்டு பக்கத்திலுமிருந்த இடத்தை தனது கால்களை மடக்கிப் போட்டு, அகன்று உட்கார்ந்து, பாதுகாத்தார். கர்ணத்தின் காகிதக் கட்டு ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டது.

உட்கார்ந்திருந்தவர்கள் எல்லோரும், ஏதோதிட்டமிட்டபடி செய்வதுபோல் சின்னன் உட்கார இடமில்லாமல் செய்துகொண்டார்கள். அவர்கள் ஒரு சொல் கூட பேசவில்லை, கண்சாடை கூடச் செய்யவில்லை. ஆனல் சின்னனிடமிருந்து அவர்கள் தங்களுக்குப் பக்கத்திலிருந்த இடங்களைப் பாதுகாத்துக் கொண்டார்கள். உண்மையில் தங்களுடைய மேல் சாதியை—ஆசாரத்தை அவர்கள் பாதுகாத்துக் கொண்டார்கள்.

உள்ளே நுழையும் பொழுது விசாலமாக இருந்த இடங்கள் திடீரென குறுகிக்கொண்டதை சின்னன் கவனித்தான், உணர்ந்தான்!

"நிற்காதே அப்படியே உட்கார்! இல்லையென்ருல் இறங்கிவிடு" கண்டக்டர் சப்தமிட்டான். சின்னன் இறங்கிவிடுவானுவென்று, உட்கார்ந்திருந்தவர்கள் மிக ஆவலுடன் கவனித்தார்கள். ஆனல் சின்னன் அவசரமாகப் போகவேண்டியிருந்ததால், இறங்கவில்லை. கீழே கிடந்த சக்கரத்தின் மீது உட்கார்ந்து கொண்டான்.

"முருகா! முருகா!" உருத்திராட்சத்தை முதலியார் தடவிக் கொண்டார்.

"என்ன செய்கிறது!" குருக்கள் முனகினர் "கலிகாலம். எல்லாம் ஒன்றுதான் என்கிற வக்கிரபுத்தி வந்துட்டுது"

"காலம் கெட்டுப்போயிட்டுது. மானம்பொய்க்குது, மழை வரலை, எல்லாம் காலங்கெட்டுப் போனதால் தான்!" கணக்கப்பிள்ளை காலக்கணக்கைப் பற்றிச் சொன்னர்.

இவர்கள் பேசுவதைப் பற்றி லலிதா கவலைப்படவில்லை. அவள் தன் கைக் கெடியாரத்தின் மீது படிந்திருந்த தூசியைத் துடைத்து கழுத்திலிருந்த நெக்லசைச் சரிசெய்துகொண்டு உட்கார்ந்திருந்தாள்.

உள்ளே இருந்தவர்கள் இடங்கொடுக்காது போகவே, சின்னன் கீழே இருந்த டயரின் மீது உட்கார்ந்தான். மற்றவர்களுக்கு அது ஒருவிதத் திருப்தியை அளித்தது. தாழ்ந்த சாதிக்காரன் தங்களுக்குச் சமமாக உட்காராமல் கீழே உட்கார்ந்திருக்கிருனல்லவா!

பஸ் போய்க்கொண்டிருந்தது. சில இடங்களில் ஒரு சிலர் இறங்கினர்கள். ஆனல் அப்பொழுதும், காலியான இடங்கள் சின்னனுக்குத் தரப்படவில்லை. வழியில் யாராவது ஏறினல், அவர்களுக்கு உட்கார இடங் கிடைத்து விடும். பஸ்ஸில் உட்கார இடமிருந்தது

ஆனால் சின்னானுக்கு இடமில்லை.

கோவிந்த தீட்சிதரும், ஐயாசாமி முதலியாரும், கனகசபைப் பிள்ளையும் பரமார்த்த லௌகிக விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். இடையிடையே சின்னான் இருப்பதைக் கண்காணித்துக் கொண்டார்கள். கைதியை அழைத்துக்கொண்டு போகும் போலீஸ்காரர்கள் வேடிக்கையாகத் தங்களுக்குள் பேசிக்கொண்டாலும் கைதி இருக்கிறான் என்ற உணர்வுடன் நடந்து கொள்வதுபோல, சின்னான் இருக்கிறான் என்ற உணர்வுடன் மேல் சாதிக்காரர்கள் நடந்து கொண்டார்கள். சமூகத்தில் சேரியைச் சேர்ந்த சின்னான் ஒரு குற்றவாளி, ஒரு கைதி!

சின்னானுக்கு நாக்கு உலர்ந்தது. தண்ணீர்த் தாகம்! எதிர் வரிசையில் உட்கார்ந்திருந்த ஒருவர் தன்னிடமிருந்த கூஜாவிலிருந்து தண்ணீர் எடுத்துக் குடித்தார். தண்ணீர் விழுவதை மிக ஆவலுடன் சின்னான் பார்த்தான். அவனைக் கவனித்த அவர் தான் ஒரு குவளை குடித்துவிட்டு, "ஏம்பா, தண்ணி வேணுமா?" என்று கேட்டார்.

முகமலர்ச்சியுடன் "ஆமாங்க!" என்றான் சின்னான்.

ஒரு குவளை தண்ணீரை விட்டு, அவர் நீட்டினார்.

சின்னான் வாங்கப்போனான்.

அந்தச் சமயம் பக்கத்திலிருந்த ஒருவர் கையைத் தட்டிவிட்டார். குவளை கீழே விழுந்து தண்ணீர் சிதறியது. தட்டிவிட்டவர் காதருகே இரகசியமாகச் சொன்னார்.

"அப்படியா? எனக்குத் தெரியாதே? நல்ல வேலை! ஏன் இவனை ஏற்றுகிறார்கள்" என்று குவளையை எடுத்து வைத்துக்கொண்டார். சின்னான் உடல் குன்றி உட்கார்ந்தான்.

ஆற்றங்கரை வந்தது. ஓட்டலுக்குள் மற்றவர்கள் சென்றார்கள். குருக்களும் லலிதாவும் பஸ்ஸில் இருந்தபடி காப்பி சாப்பிட்டு தங்களுடைய பிளாஸ்கில் மேற்கொண்டு நிரப்பிக்கொண்டார்கள். சின்னான் மரத்தடியில் போய் உட்கார்ந்தான். அவனுக்குப் பசி, கையில் காசிருந்தது. இருந்தாலும், ஓட்டலுக்குள்போக அவனுக்குத் துணிவில்லை. மிராசுதாரும் கணக்கப்பிள்ளையும் உள்ளே இருக்கிறார்கள். ஏதாவது சொன்னால் என்ன செய்வது?

டிரைவர் சாப்பிட்டு வெளியே வந்தான். ஓட்டல்காரர் அவனைப் பார்த்து "ஆற்றில் வெள்ளம் வந்திருக்கிறது!" என்றார்.

"பூ! இதைவிட அதிகமான வெள்ளத்தைப் பார்த்திருக்கிறேன்" என்று டிரைவர் சொல்லிக் கொண்டான்.

முள்ளியாறு அந்தப்பகுதியில் ஓடிக்கொண்டிருந்த ஒரு காட்டாறு. திடீரென வெள்ளம் வரும், பின் அடங்கிவிடும். அதைக் கடக்கப் படுகைப் பாலம் ஒன்று போடப்பட்டிருந்தது. தண்ணீரில் அந்தப் பாலம் அமிழ்ந்திருக்கும். வண்டிகள், பஸ்கள் அதன் மீது சென்றுவிடும். அதிலும் டிரைவர் வீராசாமி நீண்டகாலமாக இந்தப் பாதையில் அனுபவப் பட்டவன். கல் பாலம் போடப்படாததற்கு முன்பே பஸ்களை ஓட்டிப்போய்ச் சேர்த்திருக்கிறான். ஆகவே அவன் ஆற்றைப் பற்றிக் கவலைப்படவில்லை.

வீராசாமி தன் இடத்தில் உட்கார்ந்து, ஹாரனை அடித்தான். கூட்டம் உள்ளே பழைய இடங்களில் நிரம்பியது. கடைசியாகச் சின்னான் ஏறி உட்கார்ந்தான். பஸ் கிளம்பியது.

ஆற்றங்கரையின் மேட்டைக் கடந்ததும், ஆற்றில் வெள்ளம் வந்திருப்பது தெரிந்தது. ஆனால் அப்படியொன்றும் அதிகமாகக் காணப்படவில்லை. வீராசாமி தைரியமாக பஸ்ஸை விட்டான். படுகைப் பாலத்தின்மீது பஸ் சென்றது. தண்ணீரில் சலசலத்தது, பின சற்று ஆழத்தில்பஸ் திணறிக் கொண்டு நகர்ந்தது. தண்ணீருக்கு மத்தியில் பஸ்போய்க் கொண்டிருப்பதை உள்ளே இருப்பவர்கள் வேடிக்கை பார்த்தார்கள். "கடக்" என்று பஸ் நின்றது முன் இடது சக்கரம் மாட்டிக்கொண்டது. பஸ்ஸைவிட டிரைவர் முயர்ச்சித்தான். முன் சக்கரம் நகர்வதாயில்லை. டிரைவர் கீழே இறங்கினான் முழங்காலுக்குமேல் தண்ணீர் மிகவேகமாகப் போய்க்கொண்டிருந்தது. சக்கரம் பாதையை விட்டு நகர்ந்து பள்ளத்தில் அகப்பட்டுக்கொண்டது. இடதுபக்கம் சிறுகச் சிறுகச் சாய்ந்தது.

"தண்ணீர்" என்று ஒருவர் கூச்சலிட்டார். அவர் காலில் தண்ணீர் பட்டிருந்தது. அப்பொழுதுதான் தண்ணீர் உள்ளே வருவது பஸ்ஸில் இருப்பவர்களுக்குத் தெரிந்தது.

பயம் எல்லோரையும் சூழ்ந்தது.

"எல்லோரும் இறங்குங்கள்!" என்று கண்டக்டர் சத்தமிட்டான்.

முதலில் சின்னான் கீழே குதித்தான். மற்றவர் இறங்கி வண்டியைப் பிடித்துக் கொண்டு நின்றார்கள். வேகமாகப் போகும் தண்ணீர் அவர்கள் கால்களை இழுத்தபடி இருந்தது. அந்த வேகத்தை அவர்களால் சமாளிக்க முடியவில்லை.

லலிதா கடைசியாக இறங்கினாள். "முருகா! முருகா!" என்று ஐயாசாமி முதலியார் தியானித்தார். "இராகுகாலத்தில் கிளம்பிவிட்டோம், அதுதான்!" என்று பஸ் வெள்ளத்தில் அகப்பட்டுக்கொண்டதற்கு உண்மையான காரணத்தைக் கணக்கப்பிள்ளை கனகசபை சொன்னார்.

பஸ் இடதுபக்கம் சாய்ந்தது, ஒரு உலுக்கு உலுக்கியது. மேல் வைக்கப்பட்டிருந்த மூன்று நான்கு கூடைகள், ஒரு மூட்டை புரண்டு தண்ணீரில் விழுந்தன.

"ஐயோ! மாம்பழக்கூடை' என்று கோவிந்தக் குருக்கள் சத்தமிட்டு, அதை எட்டிப் பிடித்தார். கூடை அவர் கையில் பட்டது, ஆனால் அவர் பள்ளத்தில் விழுந்தார்.

பக்கத்தில் நின்ற ஐயா
முதலியார், கணக்கப்பிள்ளை
குருக்களைப் பிடித்துக்கொ
டார்கள். ஆனால் தங்கள் ப
கம் இழுத்து, பாலத்தின் மீ
நிறுத்திக்கொள்ள முடி
வில்லை. மூவரும் சேர்ந்து ப
ளத்தில் விழுந்து முழுகி எழு
தார்கள். வெள்ளம் நிலை கொ
ளவில்லை, சுழன்று சுழன்
சென்றது. அதுவும் அவர்க
இருந்த இடத்திற்குப் பக்க
தில் பெரிய பள்ளம். பெரி
சுழியிட்டு, தண்ணீர் நு
கிளப்பிச் சென்றது! அதை
சுற்றி, மூவரும் வந்தார்கள்.

"அப்பா! அப்பா!" என்
லலிதா கத்தினாள்.

மற்றவர்கள் திகைத்து
போய் நின்றார்கள், ஒன்று
செய்வது புரியாமல்!

மூவரும் ஒருவரையொ
வர் பிடித்துத்தள்ளி, மூழ்
எழுந்துகொண்டிருந்தார்க
முன்பிருந்ததைவிட பத்த
தூரம் சென்றும் விட்டார்க
குருக்கள் பரிதாபமாக பார்
தார். அவர் கண்ணில் கா
குப் பின்னால் சின்னான் நிற்ப
தெரிந்தது. "ஐயோ! சி
னான்!" என்று கூச்சலிட்டா
மறுகணம் ஒருதடவை மூழ்
ஒரு மடக்கு தண்ணீ
குடித்து எழுந்தார்.

"சின்னான்!" என்று கூ
பிடப்பட்டதும், சின்னா
உணர்வு வந்தவன்போ
விழித்துப் பார்த்தான். மூன்
பேரும் வெள்ளத்தில் த
ளிப்பது தெரிந்தது. உட
வெள்ளத்தில் அவன் பாய்ந்
சென்றான்.

சின்னான் ஆ
கில் வந்தது
மூன்று பேரு
ஒருவரையொ
வர் தன்
போட்டிபி
அவனைப் பிடி
துக்கொண்ட
கள். ஒவ்வொ
வருக்கும் தா
எப்படியாவ
தப்பித்து
கொள்ள வே
டும் என்ற எ
ணம்தான் ஓ
யிருந்தது. கா
வைத்தா
காலுக்கடிய
இருக்கும்மண
வெள்ளத்தி
வேகத்தா
பறிக்கப்ப
சரியாக நிற்க முடியவில்
வெள்ளத்தின் வேகம்
புறம் இழுக்க, பிடித்
கொண்ட மூன்று பேர்க
சின்னானை அப்படியே அழு
விடுவார்கள் போலிருந்த
சிறிது நேரம் வெள்ளத்
சின்னான் தத்தளித்தா
இரண்டுதடவை மூழ்கி எ
தான். மூன்றாவது தட
மூழ்கி எழும்பொழுது, க
கப்பிள்ளையை அலக்க
கையில் தூக்கி, அப்ப

போய்ட்டான். கணக்கப்பிள்ளை தட்டுத் தடுமாறி எழுந்து வந்தார். பின் மிராசுதாரரையும், குருக்களையும் கரைப்பக்கம் தள்ளிக் கொண்டுபோய் மணல் திட்டில் சேர்த்தான்.

வெள்ளத்தில் சின்னான் போராடுவதை பஸ்ஸுக்கு அருகிலிருந்தவர்கள் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். குருக்கள் பெருமூச்சு வாங்க வந்தார், முதலியாரின் துண்டு மட்டும்தான் மிச்சம். கணக்கப்பிள்ளையின் கண்ணாடி, பட்டு உருமாலை எல்லாம் ஆற்றோடு போய்விட்டன. மூன்றுபேர்களுடைய முகத்திலும், பயத்தின் கோரதாண்டவம் தெரிந்தது. அவர்களை மீட்டு கரைப்பக்கம் சேர்த்ததும், மீண்டும் பஸ் இருந்த இடத்துக்கு சின்னான்வந்தான்.

மற்றவர்கள்--பஸ்ஸிலிருந்து இறங்கினின்றவர்கள் "மேல் சாதிக்காரர்கள்" இப்பொழுது சின்னானை அமோகமாக வரவேற்றார்கள். வெள்ளத்தில் தனியாகப் பாலத்தின்மீது நடந்துபோக அவர்களுக்குப் பயம். ஆகையால் சின்னானின் துணை வேண்டியிருந்தது.

"சித்தே என்னைக் கொண்டு போய் விட்டுடப்பா!"

"சின்னான், பத்திரமாக அழைச்சுப்போ!',

"நானும் வந்துடறேன்!"

சின்னான் ஒவ்வொருவராக கையைப் பிடித்து அழைத்துக் கொண்டுபோய் அக்கரை சேர்த்தான். தாழ்ந்த சாதிக்காரனாயிற்றே சின்னான் என்று யாரும் நினைக்கவில்லை. போட்டிபிட்டு சின்னானைப் பிடித்துக் கொண்டு நடந்தார்கள்.

"அதோ! லலிதா நிற்கிறாள். பத்திரமா அழைச்சுட்டு வா! நீ நல்லாயிருப்பே!" என்று குருக்கள் மிகப் பரிவுடன் சின்னானிடம் சொன்னார்.

லலிதா குளிரில் நடுங்கிக் கொண்டு நின்றாள். சின்னான் மெதுவாக அவளை அழைத்து வந்தான். காலில் போட்டிருந்த சிலிப்பர் தடுக்கி விழுந்து விட்டாள். குழந்தையைப் பிடித்து வந்து கரையில் சேர்ப்பது போல, லலிதாவை சின்னான் கரையில் கொண்டுவந்து போட்டான். எல்லோரும் பத்திரமாக சின்னான் உதவியால் கரைக்கு வந்து சேர்ந்தார்கள்.

பஸ் அங்கேயே நின்றது. சின்னானும் நான்கைந்து பேர்களும் தூக்கிக்கொடுத்து சரிந்த சக்கரத்தைப்பாலத்தின் மீது வரச் செய்து, பின் மெதுவாக நகர்த்தி மறு கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தார்கள்.

நனைந்த ஆடைகளைச் சிலர்காயவைத்தார்கள், வேறு ஆடைகள் இருந்தவர்கள் மாற்றி உடுத்திக்கொண்டார்கள். குருக்களும், முதலியாரும், கணக்கப்பிள்ளையும் பக்கத்திலிருந்த சத்திரத்தில் நுழைந்தார்கள்.

மீண்டும் பஸ் புறப்படும்நேரம் சத்திரத்திலிருந்தவர்கள் வந்தார்கள் புதிய பொலிவுடன். வெள்ளத்தில் அழிந்துபோன விபூதிப் பட்டைகள் மீண்டும் காட்சியளித்தன. குருக்கள் தலை மயிரைத் தட்டி முடித்தார். அவருடைய காதில் பூச்சொருகப்பட்டிருந்தது. முதலியார் பட்டு பீதாம்பரத்தைப் போர்த்தியிருந்தார். நெற்றியில் பூசப்பட்ட விபூதி உதிர்ந்து கன்னத்தில் இருந்தது. கணக்கப்பிள்ளை கண்ணாடியில்லாததால் விழித்தார். லலிதா, புதிய ஆடைவகைகளுடன், ஆர்கண்டி சேலைக்குப்பதில் ஜார்ஜட், வெல்வெட்டுக்குப்பதில் நைலான், இப்படியாக காட்சியளித்தாள் பஸ்ஸில் ஒவ்வொருவராக ஏறிக் கொண்டார்கள்.

பஸ் புறப்பட்டது. கடைசியாக சின்னான் ஓடிவந்து ஏறிக் கொண்டான். மற்றவர்களைப் போல மாற்றுஉடை அவனிடம் இல்லை. ஈரத்துண்டைக் கட்டி, வேட்டிசட்டைகளை மரத்தடியில் உலர்த்திக் கொண்டிருந்தவன், அவற்றைச் சுருட்டிக்கொண்டு ஓடிவந்து ஏறிக்கொண்டான்.

எல்லோரும் உட்கார்ந்திருந்தார்கள். சின்னான் உட்கார இடம் பார்த்தான். அவன் உட்கார இடம் தேடுவதை, உட்கார்ந்திருந்தவர்களும் பார்த்தார்கள். ஆனால் நகர்ந்து கொடுத்து, உட்கார இடம் தரவில்லை. பழையபடி தங்கள் இடங்களையும் பக்கத்து இடங்களையும் அவர்கள் பாதுகாத்துக் கொண்டார்கள். பழையபடி சின்னான் கீழேகிடந்த சக்கரம்மீது உட்காரவேண்டியிருந்தது!

பஸ் ஓடிக்கொண்டிருந்தது. பக்கத்திலிருந்த க்ஷேத்திரத்தின் மகிமையை கோவிந்த குருக்கள், மிராசுதாருக்கும் கணக்கப் பிள்ளைக்கும் சொல்லிக்கொண்டிருந்தார். இடையில் லலிதா தந்த காப்பியை துணியை மறைத்து ஒரு மூச்சில் குடித்தார், "முருகா!" என்று தனது உருத்திராட்சத்தைச் சரிசெய்து கொண்டார் முதலியார். கணக்கப்பிள்ளை தனது ஈரமான துண்டை வெளியே பிழிந்தார். தண்ணீர்ச் சொட்டுகள் விழுந்தன.

சின்னான் உள்ளத்தைப் பிழிந்த தண்ணீர் கண்களிலிருந்து சொட்டிக் கொண்டிருந்தது! ○

பம்பாயில் காங்கிரஸ் சரிவு!

மராட்டிய மாநிலப் பிரச்சினையில் காங்கிரசுக்குத் தோல்விமேல் தோல்வி கிடைத்தபடி இருக்கிறது. தனி மராட்டிய மாநிலம் வேண்டிப் போராடும் சம்யுக்த மராட்டிய சமிதி காங்கிரசுக்கு மண்டையடிகளைக் கொடுத்தபடி இருக்கிறது. பொதுத்தேர்தலில் மராட்டியத்தில் கிடைத்த தோல்விகளைத் தொடர்ந்து பம்பாய் கார்ப்பரேஷன் தேர்தல்கள் வந்தன; அங்கும் காங்கிரஸ் தோல்வியடைந்தது.

மாநிலச் சிரமைப்புக்குப் பின், பம்பாய் நகரம் மராட்டியத்துடன் இணைக்கப்பட்டு தனி மராட்டிய மாநிலம் அமைக்கப் படவேண்டும் என மக்கள் போராடினர். மொழிவழி மாநில அமைப்புக் கொள்கை அடிப்படையில் அவர்கள் கேட்டது நியாயமானதே! ஆனால் பம்பாய் மராட்டியத்துடன் சேர்வதை பம்பாயிலுள்ள முதலாளிக் கும்பல்கள் விரும்பவில்லை! அவர்களுக்கு மத்திய அரசாங்கம் பணிந்துகொடுத்தது! மராட்டியத்தின் வேண்டுகோள் — பம்பாயின் உரிமை மறுக்கப்பட்டது! முதலில் மூன்று மாநிலங்களாகப் பங்குபோட்ட காங்கிரஸ் பின் எல்லாவற்றையும் ஒன்றாகக் கட்டி ஒரே மாநிலமாக்கிவிட்டது! மரட்டியத்தின் உரிமைக்குப் போராட, சம்யுக்த மராட்டிய சமிதி என்பது அமைக்கப்பட்டது.

பொதுத் தேர்தலில் மராட்டியத்திலிருந்த 21 மக்கள் சபைத் தொகுதிகளில் ஒன்று விடாமல் எல்லாவற்றையும் சம்யுக்த மராட்டிய சமிதி பிடித்தது; காங்கிரசுக்கு எல்லா இடங்களிலும் தோல்வி!

இப்பொழுது பம்பாய் கார்ப்பரேஷன் தேர்தலில் காங்கிரசும் மராட்டிய குழுவும் போட்டியிட்டன. மொத்தம் 131 இடங்களில் 110 இடங்களுக்கு காங்கிரஸ் போட்டியிட்டது. மராட்டியக் குழு 98 இடங்களில் அபேட்சகர்களைப் போட்டது. தேர்தல் முடிவில் **சம்யுக்த மராட்டிய குழுவுக்கு 68 இடங்கள் கிடைத்துள்ளன; காங்கிரசுக்கு 55 இடங்கள் கிடைத்தன.**

சம்யுக்த மராட்டிய குழு 10லட்சம் வாக்குகளைப் பெற்றது: காங்கிரஸ் கட்சிக்கு 7½ லட்சம் வாக்குகள் விழுந்தன!

சம்யுக்த மராட்டிய சமிதியின் வேண்டுகோளுக்கு மக்கள் தீர்ப்புத் தந்துவிட்டனர். மராட்டிய மாநிலம் அமைக்கப் படவேண்டும், பம்பாய் நகரம் மராட்டியத்துடன் இணைக்கப் படவேண்டும், ஆகிய இரு கோரிக்கைகளை தேர்தலின் குறிக்கோளாகவைத்து மாராட்டிய குழு போராடியது. அதன் மீது மக்களின் தீர்ப்புகிடைத்துவிட்டது. பொதுத் தேர்தலும் பம்பாய் கார்ப்பரேஷன் தேர்தலும், ஓட்டுச் சீட்டுகளின் மூலம் மக்களின் விருப்பத்தைத் தெரிவித்துள்ளன.

131 பேர்கள் கொண்ட பம்பாய் நகரசபையில், காங்கிரஸ் கட்சியினர் 55 பேர்கள்தான் சென்றுள்ளனர், இருந்தாலும் "**சீக்கிரத்தில் பம்பாய் கார்ப்பரேஷனில் காங்கிரஸ் கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும்**" என்று ஒருவர் அறிவிக்கிறார். அவர் சாதாரணமானவரல்ல, மத்திய அரசாங்க மந்திரிகளில் ஒருவர்—பம்பாய் மாநிலக் காங்கிரசின் முன்னாள் தலைவர்-தேர்தல் புலி எனப் பெயர் பெற்றவர்-எஸ். கே. படில் அவர்கள்!

131பேர் இருக்கிற இடத்தில் 55 பேர்கள்தான் காங்கிரசுக்கு இருக்கிறார்கள். இருந்தாலும், "காங்கிரஸ் அதிகாரத்தைக் கைப்பற்றும்" எனக் கூசாமல், பொறுப்புவாய்ந்த மத்திய மந்திரி ஒருவரேசொல்கிறார்! இதுதான் ஜனநாயகமா? இதுதான் ஜனநாயக முறையா? மத்திய மந்திரி பீடத்திலிருக்கும் ஒருவர், மாநில விவகாரங்களில், அதிலும் ஒரு நகரத்தின் அதிகாரத்தில் ஈடுபடுகிறார், காங்கிரஸ் கட்சியின் சார்பாக! காங்கிரசுக்குத் தோல்வி என்று அறிவிக்கிற செய்திக்கு அடுத்தபடி "காங்கிரஸ் எப்படியும் பம்பாய் கார்ப்பரேஷன் அதிகாரத்தைக் கைப்பற்றிவிடும்" என்று கனம் படில் பத்திரிக்கை நிருபர்களுக்குத் தந்த பேட்டியில் கூறுகிறார். அதிக இடங்களில் வெற்றி பெற்றாலும் காங்கிரஸ் ஆட்சி செய்யும், அதிக இடங்களில் தோல்வியடைந்தாலும் காங்கிரஸ் தான் ஆட்சி செய்யும்!

பம்பாய்க் கார்ப்பரேஷனில் யார் ஆதிக்கத்துக்குவருவார்களென்பது ஒருபுறமிருக்கட்டும், மக்களிடம் வாக்குகளைப் பெறுவிட்டாலும், குறைந்த எண்ணிக்கையினராக இருந்தாலும், 131ல் 55 பேர்களாக இருந்தாலும். தாங்கள்தான் அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் என்று நினைப்பதில், எவ்வளவு மமதை, ஆணவம், எதேச்சாதிகாரம், ஜனநாயக விரோதம் இருக்கிறது!

•

கனம் படில் நினைப்பதுபோல காங்கிரஸ் ஆட்சியில், பம்பாய் கார்ப்பரேஷனில் காங்கிரஸ் அதிகாரத்தைக் கைப்பற்றக் கூடும். அது காங்கிரசுக்கு நல்ல வெற்றியாக இருக்கும், ஆனால் மக்களுக்கு, ஜனநாயகத்துக்குத் தோல்வியாக அமையும்! ○

மடிப்பிச்சை ஏந்தும் மாதா,

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடமாகிவிட்டிருக்கிறது என்றெல்லாம் செய்திகள் வந்தன.

யாரோ வெள்ளையன் ஆண்டு வந்த நாட்களிலே வந்த சேதியல்ல, வெள்ளையனை விரட்டிய வீராதி வீரர்கள் ஆட்சிசெய்யும் காலத்திலே நடக்கிற கொடுமைதான் இதுவும். இலங்கை இந்தியர்என்ற பிரச்சினையில், இத்தனைப் பொறுப்பும் அக்கரையும் அற்று அலட்சிய பாவத்துடன் இந்திய அரசாங்கம் இருந்து வருவதற்குக் காரணம், இலங்கை இந்தியர் என்ற அடைமொழியின் பெயரால் வாழுகிறவர்கள், அத்தனை மக்களும் பெரும் பாலும் தென்னாட்டார். அதிலும் சிறப்பாகத் தமிழர் என்பதைத் தவிர வேறொன்றும் காரணமில்லை, தென்னாட்டின் பல்வேறு பிரச்சினைகளையும் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நோக்கி வரும் இந்திய அரசாங்கம் இந்தப் பிரச்சனையிலும் அதே போக்கைத் தான் கொண்டிருக்கிறது என்று சொல்வதிலே என்ன தவறு இருக்கமுடியும்?

ஏறத்தாழ பத்து லட்சம் தமிழ் மக்களைப் பெரிதும் பாதித்திருக்கிறது இன்றைய இலங்கை அரசாங்கத்தின் போக்கு. இலங்கைத் தீவையே தங்கள் வியர்வையால், குருதியால், பொன் விளையும் பூமியாக மாற்றியவர்கள்தான் இன்று நாடற்றவர்கள் எனப் பிரகடனப் படுத்தப்பட்டிருப்பவரில் பெரும்பாலோர். இலங்கைப் பொருளாதாரத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும் முதுகெலும்பு போன்றவர்களுக்குத்தான் இந்தக் கதி வந்துற்றிருக்கிறது. இருபதாண்டுக்காலமாக அவர்கள் அனுபவித்து வந்திருக்கும் உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டு இன்று நாடற்றவர்களாக்கப் பட்டிருக்கிறார்கள். இதைத் தட்டிக் கேட்கமுடியாத, இதற்குப் பரிகாரம் இதுவரை தேடமுடியாததயாபரர்தான் இந்தக் கோலாகலமான வரவேற்புக்கு செல்கிறார் அங்கே! இப்படி நாடற்றவர்கள் என்று ஒரு புதிய சமுதாயத்தையே அங்கு உருவாக்கப்பட்டிருக்கிறது அங்குள்ள ஆட்சியாளரால்; இந்தப் பிரச்சினை எவ்வளவு அலட்சியப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது என்பது இதுவரையிலே இந்திய அரசாங்கம் எடுத்து வந்திருக்கும் முயற்சிகளையும் அதனால் ஏற்பட்டிருக்கும் பலனையும் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம். இலங்கை இந்தியர் பிரச்சினை சம்பந்தமாகக் கடிதப் போக்குவரத்து நடந்து வந்த நேரத்திலே, 1947ம் ஆண்டுக்கு முன்பு இலங்கையில் குடியேறியவர்கட்கு பிரஜா உரிமை வழங்கப்படும் என்று கூறப்பட்ட உறுதிமொழி வெறும் ஏட்டுச்சுரையாயிற்று. பிறகு இலண்டனில் நடைபெற்ற மாநாட்டில் அப்பொழுதைய பிரதமர் சேனநாயகா ஐந்து லட்சம் மக்களுக்கு உரிமைதரப்படும் என்று வாக்குறுதி அளித்து, அது வரையில் இலங்கை இந்தியப் பெயர்கள் தனி வாக்காளர் பட்டியல் தயாரிப்பில் வைத்திருப்பதற்கும் சம்மதிக்கப்பட்டது. இதன்படி செய்யப்பட்ட முடிவும் காற்றிலே பறக்க விடப்பட்டது. இந்திய அரசாங்கமும் அதைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை.

இந்திய அரசாங்கத்தின் மந்த நிலையை புரிந்துகொண்டுதான் இலங்கைவெகுவேகமாக தமிழருக்கு எதிரான பல காரியங்களைச் செய்து வருகிறது. சிங்களம் மட்டுமேதான் ஆட்சி மொழியாகும் என்று சட்டம் செய்யப்பட்டு விட்டது, தமிழ் புறக்கணிக்கப்பட்டு விட்டது. சென்ற கிழமை வந்த செய்திகளில் கூட ஏறத்தாழ ஆறு லட்சம் பேரின் பிரஜா உரிமை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு விட்டன என்று தெரிய வருகிறது. இந்தியப் பிரதமரை வரவேற்க இருக்கும் இந்த நேரத்திலே காட்டப் பட்டிருக்கும் நல்லெண்ணத்தின் அறிகுறிபோலும்!

தமிழன் நாடற்றவனாக்கப்பட்டு, தமிழ்மொழி ஆட்சி மொழியாவது தடுக்கப் பட்டு, நாட்டை விட்டுவெளியே துரத்தும் நிலைமைகள் முற்றிக் கொண்டிருக்கும்போது தான் இந்த ஆசியாவின் ஜோதிக்கு இத்தனை ஆடம்பரமான வரவேற்புகள்.

பண்டிதரின் வருகையைக் காட்டியல்லவா, அந்த எதேச்சாதிகாரிகள் இனி பரிகசிப்பர்!

"பைத்தியக்காரர்களே! இதோ பாருங்கள், பிரஜா உரிமை, நாட்டின் ஆட்சிமொழி யென்றெல்லாம் பேசுகிறீரே அர்த்தமற்ற முறையில், உமது தலைவராம் நேரு எம்மை மதித்து, எமது நட்பை ஏற்று இதோ விழாக்களில் கலந்து கொள்வது காணீர்!" என்றல்லவா கேட்பர். "நாங்கள் உங்களுக்கு மறுத்திருக்கும் உரிமை அவர் அறியாததல்ல, உங்கள் பிரச்சினை அவருக்கு புரியாததுமல்ல், நாங்கள் தவறு செய்தவர்களானால், எம்மோடு கலந்துறவாட, உண்மைக்காகப் போராடும் அந்த உத்தமர் மனம் விட்டு பேசாமலிருப்பாரா? நீங்கள் கேட்பது பொருளற்றது, பொறுப்பற்றதுஎன்பது அந்த உத்தமருக்குத் தெரியும். அதனால்தான் உங்களைப்பற்றி ஒரு துளியும் கவலைப்படாமல் உங்கள் உருட்டல் மிரட்டல்களை காதில் போட்டுக்கொள்ளாமல் இங்கு நடக்க இருக்கும் விழாவில், தனக்கு இருக்கும் பல்வேறு அலுவல்களையும் விலக்கிவைத்துவிட்டு இங்கு ஓடோடி வருகிறார்!" என்றும் கூட பேசுவர்.

தமிழ் ஆட்சிமொழி உரிமை மறுக்கப் பட்டிருப்பதை எதிர்த்து பெரியதொரு கிளர்ச்சியை நடத்தும் திட்டத்தை இந்தத்திங்கள் நடைமுறைக்கு கொண்டு வரவும் ஏற்பாடுகள் நிகழ்ந்த வண்ணமுமிருக்கும் இதேநேரத்திலேதான் இந்திய பிரதமர் அங்கு செல்கிறார். வாழ்வா,சாவா,என்ற போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் பல லட்சம் மக்கள் மத்தியிலே, அவர்கள் வாழ்வைப் பாழ்படுத்தப் பயங்கரத்திட்டங்களை வைத்திருப்போரின் பாராட்டுதல்களைப் பெறப்போகிறார். எந்த மக்கள் அலட்சியப்படுத்தப் படுகிறார்களோ, கேவலப் படுத்தப்படுகிறார்களோ, அவர்களின் பிரதிநிதியென்று சொல்லிக்கொண்டு அந்த மக்களின் வாழ்வினை வரண்ட பாலைவனமாக்க எண்ணிடும் வன்னெஞ்சர் தரும் வரவேற்பினை ஏற்றுக்கொள்ளச் செல்கிறார்!

நாடெங்கும் விழாக்கோலம்! நகரெங்கும் தோரணங்கள்! செல்லுமிடமெங்கும் பொலிவும் புதுமையும் பொங்கிடும் காட்சிகள்! விழாவின் அழகொளியில், வரவேற்பில் மயங்கிடும் பண்டிதர் அதே நேரத்தில் ஒன்றை மறந்துவிடக்கூடாது, இத்தனை கோலாகல ஆடம்பர இன்னிசைகளுக்குப் பின்னால் ஆயிரமாயிரம் அழுகுரல்கள் சோககீதமிசைக்கின்றன என்பதை! பன்னீர் தெளித்து வரவேற்கும் காட்சிக்குப் பின்னால் கண்ணீர் வெள்ளம் – சொந்த நாட்டை விட்டு, சோற்றுக்கு வழியில்லாமல் வேறு நாடு புகுந்து அங்கு விரட்டப்படும் கொடுமை காரணமாக ஆற்றாது அழுத கண்ணீர்–இருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது!

அழுதகண்ணீரை துடைக்க, ஆறாத புண்ணுக்கு மருந்திட, நம்பால் உண்மையான பரிவும் அன்பும் காட்ட ஒருவரும் இல்லையே, நமக்கென பாடுபடும் ஒரு நல்லாட்சி இல்லையே என்று ஏங்கும் அந்த மக்களின் முகம் நம் கண்முன் நிழலாடுகிறது! மாதா பிச்சை எடுக்க மகனொருவன் கோதானம் செய்தானாம் தன்புகழ்வளர! அதுபோல, தேம்பித் தவிக்கும் மக்களுக்கு ஆறுதல் கூறமுடியாத நேரத்தில், அவர்களுக்கு இன்னல் தருவோரின் பாராட்டுரையை ஏற்கப் பரிவுடன் செல்கிறார் பண்டிதர்!

அங்கு மடிப்பிச்சை எடுக்கிறாள்மாதா, இங்கு கொடிக்கட்டி ஆள்கிறார் மகன்! இந்தப் புகழ் ஒளி போதாதென்றுதான் இந்தப் புதிய விழாவிற்கு புறப்பட்டிருக்கிறார். இந்தியத் துணைக் கண்டத்தின் இணையில்லாத் தலைவர். அவர் போகட்டும், அங்கு தரப்படும் வரவேற்புகளை ஏற்றுக்கொள்ளட்டும். ஆனால் அத்துணையும் ஆவி பிரிந்த சடலத்தின்மேல் எறியப்படும் அணிமணிகள் என்பதுமட்டும் நினைவிருக்கட்டும்! ○

தேர்தலில் காங்கிரஸ் மந்திரிகள்!

அதிகாரத்தை உபயோகித்த விதம்

"தேர்தலில் உங்கள் ஊரையும் பக்கத்து ஊர்களையும் பார்த்துக்கொள்வீர்களென்று நம்புகிறேன்!" இவ்வாறு ஒரு காங்கிரசு முதலமைச்சர் ஒரு கிராம உத்தியோகஸ்தருக்கு கடிதம் எழுதியிருக்கிறார். மாநில முதன்மந்திரி "பார்த்துக்கொள்ளச் சொல்லி" எழுதினாரென்றால், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் எவ்வளவு நன்றாக "பார்த்துவைத்திருப்பார்கள்!" தேர்தலில் "பார்த்துக்கொள்வது" என்றால் என்ன அர்த்தம் காங்கிரசுக்கு ஆதரவு திரட்டுவது என்பதுதான்!

பதவியிலிருந்தபடி காங்கிரசு மந்திரிகள் தேர்தல் நடத்தியதால், அதிகாரத்தின் உதவியால் அவர்களுடைய கட்சிக்கு ஆதரவு திரட்டினார்கள் என்ற குற்றச்சாட்டை மந்திரிகள் பொதுவாக மறுக்கிறார்கள். ஆனால்ராஜஸ்தான் சட்டசபையில் அந்தக் குற்றச் சாட்டைச் சொன்னவர், முதன்மந்திரி எழுதிய கடிதத்தைப் போட்டோ பிடித்து, அதை சபையில் காட்டினார்!

ஆஜ்மீரில் முதன்மந்திரியாகவும், தற்பொழுது ராஜஸ்தான் மாநிலத்தில் நிதிமந்திரியாகவும் இருக்கிற கனம் எச். உபாத்தியாயர் அவர்கள் ஒரு கிராமத்தில் 'அமின்' வேலை பார்க்கும் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் அந்த ஊரையும், பக்கத்து ஊர்களையும் பார்த்துக் கொள்ளும்படி எழுதியிருக்கிறார். அத்துடன் அந்த அமின்வேலை பார்ப்பவரின் மருமகன் அந்த முதன் மந்திரியை எதிர்த்துத் தேர்தலில் நின்றான். அவனையும் வாபஸ் பெறச் செய்துள்ளார்!

ஆஜ்மீர் முன்பு தனி அமைப்பாக இருந்து, தற்பொழுது ராஜஸ்தான் மாநிலத்துடன் சேர்ந்துள்ளது. ஆஜ்மீர் ராஜஸ்தான் மாநிலத்துடன் சேர்வதற்கு மூன்று நாட்கள் முன்பாக, முதன்மந்திரி அவர்கள் தனது மருமகனுக்கு கல்வி இலாகாவில் உயர்தர அதிகாரி வேலையைப் போட்டுவிட்டாராம்! ○

முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகள்!

புதுமையாக ஒன்று வருகிற தென்றால் மக்கள் அதை உடனே வரவேற்பதில்லை. புரியாத காரணத்தால், முதலில் அவநம்பிக்கை உண்டாகிறது. அறியாமை அதற்குத் தூபமிட பழமை தூண்ட, புதுமை வெறுக்கப்படுகிறது. புதிய கண்டுபிடிப்புகள் "ஆகாதது, பொல்லாதது" எனத் தூற்றப்பட்டுள்ளன. மூடநம்பிக்கை பழமையின்பிடிப்பு, பழக்க வழக்கங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து முன்னேற்றப் பாதையில் முட்டுக்கட்டைகள் போட்டிருக்கின்றன. பின் காலஞ் செல்லச் செல்ல எதிர்ப்பையும் மீறி ஒரு உண்மையோ, கண்டு பிடிப்போ நிலைபெற்றுவிட்டால், பழமையின் எதிர்ப்பு இதைவிட்டு வேறொருபக்கம் திரும்பிவிடும்.

இப்பொழுது பழக்கத்தில் வந்துவிட்ட பல பொருள்கள்-ஒத்துக்கொள்ளப்பட்ட பல கருத்துக்கள் ஆரம்பகாலத்தில் பலமாக எதிர்க்கப்பட்டன. இப்பொழுது நினைத்துப்பார்த்தால், அவை வேடிக்கையாக இருக்கும்.

* * *

அமெரிக்காவில் முதலாவதாக இரும்புக் கலப்பை 1797-ம் ஆண்டு செய்யப்பட்டது. மரத்தினால் செய்த கலப்பையைவிட இரும்பினால் செய்த கலப்பை நன்றாகவும் ஆழமாகவும் உழும் என்று இரும்புக் கலப்பையைக் கண்டுபிடித்தவர் சொன்னார். இரும்புக் கலப்பையால் உழவே முடியாதென்று சொன்னார்கள். கண்டுபிடித்தவர் இரும்புக்கலப்பையை வைத்துத் தன் நிலத்தை உழுது காண்பித்தார். நன்றாக உழுதது. ஆனால் அந்த நாட்டுப் பெரியவர்கள் இரும்புக் கலப்பையை ஒத்துக்கொள்ளவில்லை. என்ன காரணம் சொன்னார்கள் தெரியுமா? "இரும்புக் கலப்பை மண்ணில் விஷத்தைப் பரப்பிவிடும், அந்த மண்ணில் களைகள் அதிகமாகக் கிளம்பும்" என்பதாகும்.

இப்பொழுது அமெரிக்காவில், இரும்புக் கலப்பை மட்டுமல்ல, இயந்திரங்களே முழுமையும்-மண்ணைச் சமன் செய்வதிலிருந்து, கதிரறுத்து, வைக்கோல் கட்டுவதுவரை எல்லாவற்றையும் - செய்கின்றன. அமெரிக்க விவசாயம் முழுவதும் இயந்திர மயமாக உள்ளது.

* * *

15ம் நூற்றாண்டில் அச்சுப் பொறி கண்டுபிடிக்கப்பட்டு, புத்தகங்கள் அச்சிடப்பட்டு, கல்வியறிவு பரவியது. ஐரோப்பாவில் அச்சுக் கூடங்கள் உண்டாயின; அதைப் பலர் எதிர்த்தனர். 17ம் நூற்றாண்டில் கூட அந்த எதிர்ப்பு அடங்கவில்லை. 1670ல் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த ஒருவர், அங்கு அச்சுக் கூடங்கள் இன்னும் ஏற்படாததைக் கண்டு, மிகவும் மகிழ்ச்சியடைந்து, கீழ்க்கண்டவாறு சொன்னாராம். "இங்கு அச்சுக் கூடமோ, பள்ளிக்கூடமோ, இல்லாதபடி ஆண்டவன் மிகக் கருணையுடன் செய்திருக்கிறார். ஏனென்றால் அச்சுக் கூடம் கல்வியைப் பரப்பும்; கல்வி சந்தேகங்களையும் கேள்விகளையும் பரப்பி உலகைக் குழப்பும்!" அவரது வேண்டுதல் நீடிக்கவில்லை. அச்சுத்தொழிலும் கல்வியறிவும் பரவின, யாரும் தடுக்கவில்லை.

* * *

கார் செய்யப்பட்ட காலத்தில், அப்படியொன்று செய்ய முடியும் என்பதை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. "குதிரையில்லாமல், ஒரு வண்டி தானாக எப்படி நகரும்?" என்று கேட்டார்கள்.

கார் செய்யப்பட்டு ஓட்டப்படுவதைக் கேள்விப்பட்டவர்கள் "குதிரையை விட வேகமாக எதாலும் போவதென்பது முடியாத காரியம்" என்று சொன்னார்கள்.

1908ல் சின்சினட்டி என்ற ஊரிலிருந்த நகரசபை "பெண்கள் யாரும் காரில் போகக் கூடாது" எனச் சட்டம் போட்டதாம். பெண்களுக்கு அது ஒத்துக்கொள்வதுஇல்லை என்பது அதன் கருத்து.

அமெரிக்காவில் ஆரம்ப காலத்தில், காரில் போக மிகப் பலர் மறுத்தனராம். புதிய காரில் வந்து சுற்றிப் பார்க்கும்படி ஒரு பத்திரிகை ஆசிரியருக்கு அழைப்பு வந்ததாம். "காரில் போவது என்னுடைய கௌரவத்திற்குக் குறைவானது!" என்று அழைப்பை அவர் ஏற்கவில்லையாம்!

காரில் போவது ஆரம்ப காலத்தில் கௌரவக் குறைவாகக் கருதப்பட்டது. இப்பொழுது காரில் போகாமலிருப்பது கௌரவக் குறைவு.

காரில் பெண்கள் போவது அவர்களுக்கு ஆபத்து என்று ஆரம்பகாலத்தில் நினைத்தார்கள். இன்று பெண்கள் கார்களை வேகமாக ஓட்டிச் செல்கிறார்கள். மற்றவர்களுக்கு அதனால் ஆபத்து வந்தால் கூட, அவர்களுக்கு ஆபத்து அதிகம் வருவதில்லை.

* * *

பெண்களால் கடினமான வேலை செய்யமுடியாது என்ற எண்ணம் இருக்கிறதல்லவா? "டைப்ரைட்டர்கள்" கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் அந்த வேலை பெண்களுக்கு ஏற்றதல்ல என்று கருதப்பட்டது. "பெண்களுக்கு டைப்ரைட்டிங் கற்றுத்தரப்படும்" என ஒரு பயிற்சிக்கூடம் அறிவித்தது. அதற்கு ஊர்ப் பெரியவர்களிடமிருந்து ஏராளமான கண்டனங்கள் வந்தனவாம்.

அன்று "டைப்ரைட்டிங்" வேலை பெண்களுக்குக் கூடாது எனச் சொன்னார்கள். இன்று அந்த வேலைகளில் பெண்கள் தான் அதிகமாகக் காணப்படுகிறார்கள். அந்த வேலைக்கு அவர்கள்தாம் ஏற்றவர்கள் எனக்கூறப்படுகிறது.

* * *

நீராவியின்உதவியால் கப்பலை ஓட்டலாம் என்ற எண்ணம் ராபர்ட் புல்டன் என்பவருக்கு முதலில் உண்டானது. அதை நிறைவேற்றப் பலரிடம் போய் அவர் உதவி கேட்டார். சிலர் ஏளனஞ்செய்து திருப்பினார்கள், "ஐயோ! பாவம்! ஏதோ மூளைக்கோளாறு!" என அவரைப்பார்த்துச் சிலர் பரிதாபப்பட்டார்கள். கடைசியாக ஒரு சிலர் மட்டும் புல்டனுக்குப் பணம் கொடுத்தார்கள், மிக இரகசியமாக, தங்கள் பெயர்களையாரிடமும் சொல்லக் கூடாதென்ற கண்டிப்புடன். பெயர்கள் வெளிப்பட்டால், "அந்தப் பைத்தியக்காரத்தனத்துக்கு நீங்கள் எப்படி உதவி செய்தீர்கள்!" என்று மற்றவர்கள் கேட்டுவிடுவார்களோ என்ற பயம் அவர்களுக்கு! கடைசியாக ராபர்ட் புல்டன் கப்பலைக் கட்டி முடித்தான், நீராவியில் அந்தக் கப்பல் ஓடவும் செய்தது.

"பைத்தியக்காரன்" கட்டிய கப்பலில் அவனைப் பழித்த "புத்திசாலிகள்"பின்னால்ஏறிச் சென்றார்கள்.

* * *

நிலக்கரிவாயுவைஉபயோகப் படுத்தி அடுப்பெரிக்கவும்விளக்கேற்றவும் செய்யலாம் என இங்கிலாந்தில் வந்தபொழுது யாரும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அப்பொழுதெல்லாம் மீன் எண்ணெயை ஊற்றிதான் விளக்கு எரிப்பார்கள். மீன் எண்ணெய்க்குப் பதில் நிலக்கரி வாயுவைக்கொண்டு வருவது கூடாது என்று வாதிட்டவர்கள் சொன்ன காரணம் வேடிக்கையானது "மீன் எண்ணெய் வேண்டாமென்றால், மீன் பிடிப்பது குறையும். மீன் பிடிப்பது குறைந்தால், கடலில் கப்பலோட்டும் தொழில் குறையும். கப்பலோட்டும் தொழில் நசித்தால், இங்கிலாந்தின் கடல் ஆதிக்கம் குறையும். கடல் ஆதிக்கம் குறைந்தால் இங்கிலாந்தின் வாழ்வே போனமாதிரி!" இப்படிச் சொல்லி, மீன் எண்ணெய் விளக்குக்கு ஆதரவு திரட்டினார்கள். அதையும் மீறி, சிலர் நிலக்கரி வாயுவை உபயோகித்தனர்; பின்பு மின்சாரம் வந்தது. மீன் எண்ணெயை எல்லோரும் மறந்துவிட்டனர்.

* * *

விளக்கெரிக்க நிலக்கரி வாயுவை உபயோகப் படுத்தும் முறை அமெரிக்காவுக்கு வந்தபொழுது அங்கு வேறொரு விதமான எதிர்ப்புக் காரணம் தரப்பட்டது. கடற்கரையோர நகரங்களில் நிலக்கரி வாயு விளக்குகள் போடப்பட்டால், கரையோரத்தில் அந்த நாற்றம் பிடிக்காமல் மீன்கள் தூரத்துக்கு ஓடிவிடும்! இந்தக் காரணம் வெகுநாளைக்கு நிற்கவில்லை. நிலக்கரி வாயு விளக்கு வந்தது, மீன்கள் அதைப் பொருட்படுத்தவில்லை!

* * *

நீராவி இயந்திரத்தின் உதவியால், தண்ணீரை இழுத்து நெருப்பணைக்கச் செய்யலாம் என ஒருவர் திட்டமிட்டு, 1828ல் இலண்டன் நகரத்தில் செய்து காட்டினார். இலண்டன் நகரசபை அந்த இயந்திரத்தை தனது நெருப்பு அணைக்கும் படைக்கு வாங்க மறுத்தது! கையால் அடித்துத் தண்ணீரை எடுத்துக் கொட்டினால் தான் நெருப்பு அணையும் என அது நம்பியது. நீராவி இயந்திரத்தால் தண்ணீர் இழுக்கும் முறை 1828ல் அதற்குக் காட்டப்பட்ட போதிலும், 1860ல் தான அதை உபயோகிக்க இலண்டன் நகரசபை முடிவு செய்தது. 32 ஆண்டுகள் பலவித காரணங்களைச் சொல்லி அது தள்ளிப்போட்டு வந்தது.

* * *

இரும்புத் தகடுகளால் கப்பல்கள் கட்டுவது ஏற்பட்டபொழுது, "இரும்பு அமிழ்ந்து விடும்," "இரும்பு துருப்பிடிக்கும்" "இரும்பு காந்தத்தால் இழுக்கப்படும்" என்றெல்லாம் காரணம் சொல்லி, புதிய கப்பல்களில் ஏற பலர் அஞ்சினார்கள்; சாமான்களை அனுப்பக் கூட யோசித்தார்கள். பின் புதிய கப்பல்கள் விரைவாகவும், ஆபத்தில்லாமலும் போவது தெரிந்து, தங்கள் பழைய கருத்துக்களை மாற்றிக்கொண்டார்கள்.

* * *

உருளைக்கிழங்கு இங்கிலாந்துக்கு முதலில் கொண்டுவரப்பட்டபொழுது யாரும் அதைத் தீண்டுவதில்லை. "சாப்பிட்டால் நோய்வரும், மயக்கம் வரும்!" என்றுவீண்பயம் மக்களிடை இருந்தது. அதனால் உருளைக் கிழங்கை ஆதரித்த ஒருவர் "உருளைக்கிழங்கு விருந்து" கள் வைத்தார். அந்த விருந்துகளில் உருளைக்கிழங்கு பரிமாறப்படும், உருளைக் கிழங்கின் மகத்துவத்தைப்பற்றி அவர் பேசுவார், அவரே சாப்பிட்டுக் காண்பிப்பார்.

ஒரு தடவை அவர் வைத்த விருந்திற்கு இங்கிலாந்து அரசரும் அரசியும் தற்செயலாய் வந்தார்கள். அவர்கள் உருளைக் கிழங்கு கறியைச் சாப்பிட்டு "நன்றாக இருக்கிறதே!" என்று சொல்லிவிட்டுப் போனார்கள். அதற்கப்புறம் உருளைக் கிழங்கை எல்லோரும் சாப்பிட ஆரம்பித்தார்கள்! 0

கனம் மந்திரி பதிலில் 'கனம்' இல்லை!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"ராஜாக்கள், சர்கள், ஜமீன்தார்கள், மிட்டாதார்கள் அமர்ந்திருக்கிறார்கள்!" எனக் கனம் சுப்பிரமணியம் சொன்னாரா என்றால் இல்லை. எதிர்க்கட்சியினரை ஏகாதிபத்தியதாசர்கள் என முன்பொரு தடவை சட்ட சபையிலேயே கனம் சுப்பிரமணியம் அவர்கள் எக்காளமிட்டிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தினரைத் தாக்க நினைக்கும்பொழுது முதலாவதாக அத்தகைய குற்றச்சாட்டுதான் கனம் மந்திரியின் மனத்திற்கு வரும். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தினரை எதிரில் வைத்து, ராஜாக்களையும் சர்களையும் சிற்றரசர்களையும் ஜமீன்தாரர்களையும் தமது பக்கத்தில் வைத்துக்கொண்டு, அண்ணுவுக்குக் "காரசாரமாகப்" பதிலளிக்க முடியவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கூறும் வாதங்களையும், ஆதாரங்களையும், மேற்கோள்களையும், புள்ளிவிவரங்களையும், தனித்தனியாக மறுத்தோ, எதிர்த்தோ கனம் சுப்பிரமணியம் அவர்கள் தகுந்த காரணங்களுடன் பதில் கூறவில்லை. பிரிவினைக் கொள்கையைப் பற்றி மட்டும் அவர் இவ்வாறு கூறியுள்ளார். "கம்யூனிசுட்கள் ஏமாற்றமடைந்ததைப் போலவே திராவிடமுன்னேற்றக் கழகத்தினரும் ஏமாற்றமடையப் போகிறார்கள். கம்யூனிசுட்கள் பலாத்காரத்தில் நம்பிக்கை வைத்திருந்தார்கள், பலாத்காரமின்றி இந்தியா விடுதலை பெற்றது அவர்களைப் பின்வாங்கச் செய்தது. அதைப் போலவே இந்தியாவிலிருந்து பிரிந்தால்தான் தமிழ் நாட்டு மக்கள் பலன்பெற முடியுமென தி. மு. க. நினைக்கிறது. ஆனால் இந்தியாவுடன் சேர்ந்திருந்து தமிழ்நாடு முன்னேறுவதைப் பார்க்கும்பொழுது அவர்கள் நிச்சயமாக ஏமாற்றமடையப் போகிறார்கள்"

வடக்குத் தெற்கு என்று நாம் பேசுவதற்கு இதைத்தான் பதிலாக கனம் சுப்பிரமணியம் அவர்கள் தந்துள்ளார்கள். இதில் கம்யூனிசுட் கட்சி-பலாத்காரம் - இந்திய விடுதலை - நாட்டுப்பிரிவினை - தி. மு. க.-இப்படி பல திறப்பட்டவைகளை ஒன்று சேர்த்து நமக்குப் பதிலாகத் தந்துள்ளார். அவர் சொல்லிய அதே வாக்குகளை வைத்து, "தி. மு. க." என்பதற்குப் பதிலாக "கனம் சுப்பிரமணியம்" என்று போட்டு அதற்கேற்றாற்போல ஒருசில சொற்களை மாற்றினால், கனம் சுப்பிரமணியத்தின் வாதத்தை அவருக்கு எதிராகவே திருப்பிடலாம். "கம்யூனிசுட்கள் ஏமாற்றமடைந்ததைப் போலவே கனம் சுப்பிரமணியம் அவர்களும் ஏமாற்றமடையப் போகிறார். கம்யூனிசுட்கள் பலாத்காரத்தில் நம்பிக்கை வைத்திருந்தார்கள், பலாத்காரம் இன்றி இந்தியா (வும் மற்ற நாடுகளும்) விடுதலை பெற்றது அவர்களை பின்வாங்கச் செய்தது, அதைப்போலவே இந்தியாவுடன் இணைந்திருந்தால் தான் தமிழ் நாட்டு மக்கள் பலன் பெற முடியுமென்று கனம் சுப்பிரமணியம் நினைக்கிறார். ஆனால் இந்தியாவிலிருந்து பிரிந்து நாம் முன்னேறுவதைப் பார்க்கும்பொழுது அவர் நிச்சயமாக ஏமாற்ற மடையப் போகிறார்."

கனம் சுப்பிரமணியம் அவர்களின் வாதப்படி பார்த்தால் இதுவும் சரியாகத்தான் இருக்கும். கனம் மந்திரியின் வாதத்தில் எங்கே குறையென்றால், முதல் பகுதியில் உபமானம் சொல்லும்பொழுது சில கருத்துக்களை முன்னதாக அவரே முடிவு செய்து கொண்டார். இரண்டாவது பகுதியில் "இப்படியிப்படியெல்லாம் எதிர்காலத்தில் நடக்கும், இப்படியிப்படி இவர்கள் ஏமாறப் போகிறார்கள்" எனஎதிர்காலத்தைப் பற்றி ஒரு கற்பனை செய்துகொண்டார். ஆகவே பரிசிலிக்கப்படாத சொந்த எண்ணம், எதிர்கால நிகழ்ச்சி பற்றிய கற்பனை, இரண்டும் சேர்ந்து பதிலாகத் தரப்பட்டிருக்கிறது! அவற்றை ஒவ்வொன்றாகப் பார்க்கலாம்.

"கம்யூனிசுட்டுகள் பலாத்காரத்தில் நம்பிக்கையுள்ளவர்கள், இந்திய விடுதலை அடைந்த முறையால் அவர்கள் பின்வாங்கிவிட்டார்கள்" இவை கம்யூசுட்டுகளைப்பற்றி கனம் சுப்பிரமணியம் கொண்டுள்ள கருத்து. சரியென்றே வாதத்துக்காக வைத்துக் கொண்டாலும் "பின்வாங்கிய கம்யூனிசுட்கள் இப்பொழுது கேரளத்தில் முன்னால் வந்து நிற்கிறார்களே, அது எப்படி? கனம் சுப்பிரமணியம் இதற்குப் பதில் கூறவேண்டும்.

"பலாத்காரமின்றி இந்தியா விடுதலை பெற்றது!" எனச் சுப்பிரமணியம் அவர்கள் கூறுகிறார்கள். பலாத்காரமின்றி இந்தியா மட்டுமல்ல, மற்றும் பல நாடுகள் அப்படித்தான் பிரிந்தன. பர்மா, இலங்கை, பாகிஸ்தான் முதலிய நாடுகளும் பலாத்காரமின்றிதான் ஒரேயடியாக இந்தியாவுடன் விடுதலையடைந்தன. இரண்டாவது உலகப்போருக்குப்பின் உண்டான உலகச் சூழ்நிலையில் இந்தியாவுக்கும்பக்கத்திலுள்ள மற்ற நாடுகளுக்கும் விடுதலை கிடைத்தன. பலாத்காரமின்றி பர்மா பிரிந்தது, பாகிஸ்தான் பிரிந்தது, அதைப்போலவே பலாத்காரமின்றி திராவிடமும் பிரியும் என்கிறோம்!

இந்திய விடுதலையைப்பற்றி காங்கிரசுக்காரர்களுக்கே முரண்பாடான கருத்துக்கள் இருக்கின்றன. "பலாத்காரமின்றி இந்தியா விடுதலை அடைந்தது" உண்மையானால் ஆகஸ்ட் போராட்டங்களைப் பற்றி அவர்கள் என்னசொல்கிறார்களோ தெரியவில்லை. 1942 ஆகஸ்ட் போராட்டத்தில், தண்டவாளத்தைப் பெயர்த்தல், தந்திக்கம்பங்களை அறுத்தல், தபாலாபீசுகளைக் கொளுத்துதல் போன்ற காரியங்கள் காங்கிரசுக்காரர்களால் செய்யப் பட்டன. அதுவே ஆகஸ்ட் வாரமாகக் கொண்டாடப் படுகிறது. பலாத்காரமின்றி இந்தியா விடுதலையடைந்ததென்றால், ஆகஸ்ட் போராட்டத்தை உயர்த்திப் பேசக்கூடாது. ஆகஸ்ட் போராட்டத்தினால் இந்தியாவுக்கு விடுதலை கிடைத்ததென்றால் பலாத்காரமின்றி இந்தியா விடுதலையடைந்ததாகக் கூறக்கூடாது.

இவற்றையெல்லாம் விட, "கம்யூனிசுட்கள் ஏமாற்றமடைந்தார்கள், அதுபோலவே நீங்களும் ஏமாற்றமடையப் போகிறீர்கள்" எனச் சுப்பிரமணியம் அவர்கள் கூறுவதுதான் புரியவில்லை. கம்யூனிசுட்கள் ஏமாற்றமடைந்ததாக வைத்துக் கொண்டாலும், அதைப் போலவே மற்றவர்களும் ஏமாற்றமடைய வேண்டும் என்று எங்கேயாவது எழுதி வைத்திருக்கிறதா? ஒன்றுக் கொன்று பொருத்தமில்லாமல், மந்திரியார் சேர்த்துக் கூட்டுகிறார்.

கடைசியாக மந்திரியார் "இந்தியாவுடன் சேர்ந்திருந்து தமிழ்நாடும் முன்னேறுவதைப் பார்க்கும்பொழுது அவர்கள் நிச்சயமாக ஏமாற்றமடையப் போகிறார்கள்" என்று கூறுகிறார். அகில இந்திய கட்டுப்பாட்டுக்குள் அடக்கப்பட்டு இருப்பதால், தமிழ்நாடு மட்டுமல்ல, பொதுவாகத் தென்னாடே—திராவிடமே பின் தங்கியிருப்பதாக நாம் கூறுகிறோம். "தமிழ்நாட்டுப் பிரிவினை" என்று நிதிமந்திரி கூறியபொழுதே "திராவிட நாடு" என்று கழக அங்கத்தினர்கள் அதைத் திருத்தினார்கள். அவரா திருத்திக்கொள்கிறவர்? "என்னைப்பொறுத்த வரையில் தமிழ்நாடு என்றே

சேலம் தேர்தல் வழக்கு நிதி!

சேலம் தேர்தல் வழக்கைச் சிறந்த முறையில் தேர்ந்த வழக்கறிஞர்களைக்கொண்டு நடத்தவேண்டி அன்பர்களால் வழங்கப்பட்டுள்ள நிதி விபரம்:

பிணுங்கு இளங்கோ கால் பந்தாட்டக் குழுவினர் தோழர் என் அந்தோணி மூலம் ரூ. 62—44.

தோழர் என். வி. நடராசன் அவர்கள் மூலம்: பொன்மலைப்பட்டிக் கூட்டத்தில் ரூ. 10—62; திருச்சிக் கூட்டத்தில் ரூ. 4—00; நரசிங்கபுரம் கூட்டத்தில் ரூ. 7—58; திருப்பெயர் கூட்டத்தில் ரூ. 3—75;

28-4-57ல் பெங்களூரில் நடைபெற்ற சிறப்புக்கூட்டத்தில் தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் மூலம் 125—00.

நேரிலும் மணியார்டர் மூலமும்: வி. மாமநந்தல் தி. மு. கழகம் ரூ. 2—00; கோமளீஸ்வரன்பேட்டை க. இலக்குமணசாமி ரூ, 20—00; கோவை வெற்றி வேந்தன் ரூ. 3—00; திருவள்ளூர் மஜீத் நினைவு மன்றம் ரூ. 1—00; பெரியகுரிச்சி தங்கம்மாள் ரூ. 1—00; அம்மாப்பட்டி தி. மு. கழகம் ரூ. 5—00; பெருமாத்தூர் து. சம்பந்தம் ரூ. 1—01; கேடார் வி. ராதாகிருஷ்ணன் ரூ. 1—00; தாமரங்கோட்டை ஆர். இராமச்சந்திரன் ரூ. 2—01; மேலை புவனகிரி சி. த. கலியபெருமாள் ரூ. 2—03.

4-5-57 வேலூர் தோட்டப்பாளையம் தி. மு. க. பொதுக் கூட்டத்தில் ரூ. 5—50.

5-5-57 கோவைச் சிறப்புக்கூட்டத்தில் நகர தி.மு. கழகம் ரூ. 500—00; ரிக்சா தொழிலாளர்கள் ரூ. 9-00 தனிப்பட்டவர்கள் ரூ. 2—00.

5-5-57 வடவழி தி. மு. கழகம் ரூ. 10—00.

5-5-57 கோவைப் பொதுக்கூட்டத்தில்; உதயசூரியன் படிபப்கம் ரூ. 5—00; குணியமுத்தூர் தி. மு. கழகம் ரூ. 5—31; சூலூர் அற்புதசாமி ரூ. 5—00; சூலூர் தாளமுத்துநடராசன் படிப்பகம் ரூ. 3—20; தனிப்பட்டவர் ரூ. 1—00.

5-5-57 பெரியநாய்க்கன் பாளையம் பொதுக்கூட்டத்தில்; தமிழன் படிப்பகம் ரூ. 20—37; குருடன்பாளையம்-நரசிம்மநாய்க்கன்பாளையம் தி. மு. க. தோழர்கள் ரூ. 20—31; அத்திப்பாளையம் தி. மு. க. ரூ. 5—33; ஜோதி மில் தொழிலாளர்கள் ரூ. 5—31; தனிப்பட்டவர்கள் ரூ. 2—00.

நிதி அனுப்பவேண்டிய முகவரி:

இரா. நெடுஞ்செழியன்,

26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை—1.



தோழர் அ. பொன்னம்பலனுர் அவர்கள் மலாய் நாட்டு நண்பர்களின் அன்பழைப்பின் பேரில் இன்னும் ஒருவாரத்தில் சென்னையிலிருந்து "எஸ். எஸ். ரஜுலா" கப்பலில் கிளம்புகிருர். மலாய் நாட்டில் 2, 3 திங்கள்கள் அவர் தங்கக்கூடு மெனத் தெரிகிறது. அந்தக் காலத்தில் பினங்கு, சிங்கப்பூர், சிரம்பான், ஈப்போ, மலாக்கா, கோலாலம்பூர் ஆகிய பகுதிகளில் இரண்டு நண்பர்களின் விருந்தினராகத் தங்குவார்.

தோழர் பொன்னம்பலனுர் அவர்கட்கு சுகமான கடற்பயணமும் மலாயாவில் தங்கும்பொழுது ஓய்வும் அமைதியும் மிக்க நல்ல நாட்களும் கிடைக்குமாறு நமது அன்புகலந்த வாழ்த்துக்களை அளிக்கிறேம்!

வைத்துக்கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு, நாம் திராவிட நாடு என்று கூறுவதையெல்லாம் தமிழ் நாடு என்று மட்டும் வைத்துப் பேசினுர்.

வடக்கு வளர்கிறது, தெற்குத் தேய்கிறது! என்று கூறுவது வெறும் அடுக்குச்சொல் அலங்காரமல்ல, என்று கூறி, அந்த சொற்றெடருக்குப் பின் பலமான உண்மை யிருக்கிற காரணத்தால்தான் நாட்டு மக்களிடை ஒரு எழுச்சியைக்காண முடிகிறது என்று அண்ணு அவர்கள் கூறினுர். இந்திய அரசியலமைப்பில், அதிகாரமெல்லாம் வடநாட்டு ஆதிபத்தியத்திடம் குவிந்திருக்கிற காரணத்தால், வடக்கு வளரவும் தெற்கு தேயவுமான நிலையுள்ளது. தெற்கு வளரவும் முன்னேறவும் வேண்டுமென்ருல் வடநாட்டு ஆதிக்கத்திடமிருந்து தெற்கு விடுபடவேண்டும் என நாம் கூறுகிறேம். கனம் சுப்ரமணியம் அவர்கள் இதை ஒத்துக்கொள்ளவில்லை. இந்தியாவுடன் சேர்ந்து இருந்தால்தான் நாம் முன்னேற்றமடைவோம் என்று அவர் சொல்கிருர்.

வடக்கு வளர்கிறது, தெற்குத் தேய்கிறது என்று அண்ணு கூறியதை கனம் சுப்பிரமணியம் இன்று மறுக்கிருர் ஆனல் இதே சுப்பிரமணியம் அவர்கள் தான் 1955ம் ஆண்டில் பெரிய நாயக்கன் பாளையத்தில் நடைபெற்ற ஐந்தாண்டுத்திட்டவிவாதஅரங்கில் பேசும் பொழுது "பெருந்தொழிற்சாலைகளைத் தென்னட்டிலும் அமைக்க வேண்டும். குறிப்பிட்ட பகுதியில் மட்டும் தொழிற்சாலைகளை அமைப்பதால் அங்குமட்டும் செல்வம் குவியும். அதனல் தென்னட்டில் நாம் விரும்பாத அரசியல் விளைவுகள் ஏற்படும்" எனக் கூறினீர்! நாம் தென்னடு-வடநாடு என்று சொல்வதை, அவர் "தென்னடு"- "ஒரு குறிப்பிட்டபகுதி" எனக் குறிப்பிடுகிருர்.

"வடக்கு வளர்கிறது; தெற்குத் தேய்கிறது" என்று நாம் கூறும்பொழுது, வெறும் சொல்லடுக்கு என்று ஒதுக்கப் பார்க்கிருர்கள், "இவர்கள் ஏமாற்றமடையப் போகிருர்கள்" என்று கனம் சுப்பிரமணியம் நம்மை எச்சரிக்கிருர். ஆனல் இதே சுப்பிரமணியம் அவர்கள் 7-7-56ல் தூத்துக்குடியில் இரும்பு வியாபாரிகள் சங்கத்தின் வெள்ளி விழாவில் பேசும்பொழுது "தென்னடு தொழில் துறையில் மிகப்பின்தங்கிக் கிடக்கிறது என்பதில் கருத்து வேறுபாடே இருக்க முடியாது. இது வெறும் பிரசாரத்திற்காக எழுப்பப்படும் முழக்கமோ சுலோகமோ அல்ல; மாருக மத்திய நிதியமைச்சரால் ஒப்புக்கொள்ளப்பட்ட மறுக்கமுடியாத அசைக்க இயலாத உண்மையாகும்" என்று சொன்னுர்!

சென்னை சட்டசபையில் இப்பொழுது பேசுகிற சுப்பிரமணியம் நமக்குப் பதில் சொல்வதற்குமுன், பெரியநாயக்கன் பாளையத்தில் பேசிய சுப்பிரமணியத்துக்குப்பதில் சொல்லியாகவேண்டும்! நமக்கு அவர் பதில் சொல்லுமுன் தூத்துக்குடித் துறைமுகப் பட்டணத்தில் பேசிய சுப்பிரமணியத்துக்குப் பதில் சொல்லியாக வேண்டும்!

1955-ல் பெரியநாயக்கன் பாளையத்தில் "தென்னட்டுக்குப் பெருந்தொழிற்சாலைகள் வேண்டும்" என்று சுப்பிரமணியம் கேட்டார்.

1956-ல் தூத்துக்குடியில் "தென்னடு தொழில்துறையில் (வடநாட்டைவிடப்) பின் தங்கியுள்ளது. அது வெறும் பிரசாரத்திற்காக எழுப்பப்படும் சுலோகம் அல்ல!" என இதே சுப்பிரமணியம் முழங்கினுர்.

1957-ல் சட்டசபையில் நின்றுகொண்டு "இந்தியாவுடன் இணைந்து இருந்து தமிழ்நாடு முன்னேறப்போவதைப்பார்த்து இவர்கள் நிச்சயமாக ஏமாறப்போகிருர்கள்?" என்கிருர்!

1955ல், 1956ல் அவர் பேசியதற்கும் 1957ல் சட்டசபையில் அவர் கூறுவதற்கும் மாறுபாடு இருப்பானேன்? "தென்னடு பின் தங்கியுள்ளது" என அன்று சொல்லிய கருத்தை மாற்றிக்கொள்ளும் வகையில் அதற்கப்புறம் என்ன நிகழ்ந்து விட்டது?

பெரிய நாயக்கன் பாளையத்தில் அவர் பேசியபின், தொழிற்சாலைகள் தென்னட்டில் ஏராளமாகப் பெருகி விட்டனவா?

தூத்துக்குடியில் அவர் துந்துபி எழுப்பியபின், புறக்கணிக்கப்பட்ட தென்னடு தொழி[ல்]மயமாக்கப்பட்டு விட்டதா?

பெரிய நாயக்கன்பாளைய[த்]திலும், தூத்துக்குடியிலு[ம்] இவர் பேசியதற்குப்பின் தென்னட்டில் என்ன அப[ரி]மிதமான தொழில்வளர்ச்சியு[ம்] வாழ்க்கை வளமும் பெரு[கி] விட்டன?

1955ல் 1956ல் இருந்த நிலை[]மையைவிட, எந்த வகையி[ல்] மாறுதலைக் கண்டு கனம் சுப்[பி]ரமணியம் அவர்கள் 1957[ல்] சட்டசபையில் அவ்வாது கூறு[]கிருர்? எதிர்க்கட்சியில் திரா[]விட முன்னேற்றக்கழக அ[ங்]கத்தினர்கள் இருக்கிருர்க[ள்] என்பதைத் தவிர, அவர்களு[ம்] அதேவிதக் கருத்தை வலி[யு]றுத்துகிருர்கள் என்பதை[த்] தவிர, வேறு என்ன மாறுத[ல்] 1955க்கும் 1957க்கும் இடையி[ல்] நிகழ்ந்துவிட்டது?

நிதி, மதி, நீதி ஆகிய மூன்[]றுக்கும் அமைச்சராக கன[ம்] சுப்பிரமணியம் அவர்கள் இரு[க்]கிருர்கள். நாட்டின் நிதிப்ப[டி] பார்த்தாலும், அரசியல் நீதி[ப்]படி பார்த்தாலும், வரலாற்[று] மதி(அறிவு)ப்படி பார்த்த[ா]லும் திராவிடம் தனியா[க] இருந்து வாழமுடியும், மு[ன்]னேற முடியும். அது மட்[டு]மல்ல அப்பொழுது தா[ன்] வாழும், முன்னேறும்!

மன்றம் வார இதழின் சந்தா விபரம்

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

இரண்டாண்டு	...	ரூ.	15·00
ஓராண்டு	...	ரூ.	8·00
ஆறுமாதம்	...	ரூ.	4·00
தனி இதழ்	..		16 காசு

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

இரண்டாண்டு	...	ரூ.	18·75
ஓராண்டு	...	ரூ.	10·00

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

தனி இதழ்	...	20 காசு

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி சென்னை-1) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களா[ல்] அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. —(தொலைபேசி எண்: 55697)